உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-154

ஜனவரி 16-31 2023

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

கல்வி, வித்தை, ஞானத்திற்கு அதாரமான மாதங்கி

கல்யாண பாக்கியம் தரும் நந்தி

e-magazine



www.aanmeegamalar.com

e-magazine

## பழனி முருகனை வழிபடுவதில் உள்ள தேவரகசியம்

# எதைப் பொருத்து வாழ்வில் முன்னேற்றம் அடைவது




"ஒருவர் வாழ்வில் முன்னேற்றம் அடைவது எதைப் பொருத்தது.?" என ஒருவர் ஞானியிடம் கேட்டார்.

"நீங்கள் கழுதையா? எருமையா? குதிரையா? என்பதைப் பொருத்தது என ஞானி பதிலளித்து விளக்கமும் தந்தார்.

அதாவது ஒரு தட்டு தட்டினால், கழுதை பின்னால் எட்டி உதைக்கும்.

எருமை அப்படியே நிற்கும்.

குதிரை பாய்ந்து ஓடும்.

அதுபோல யாராவது ஒருவர் ஒரு திட்டினால், சிலர் மீண்டும் திட்டுவார்கள். சிலர் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவார்கள்.

ஆனால் ஒரு சிலர் மட்டுமே வாங்கிய திட்டுக்கும் அவமானத் திற்கும் நேர் எதிராய் செயல்படுவார்கள். குதிரையைப் போல பாய்ந்து ஓடுவார்கள்.

பின்னால் எட்டி உதைப்பதும், சரிக்கு சரியாய்சண்டைக்கு நிற்பதும் ஒன்றே. சக்தி முன்னோக்கி பாயாததால் இவர்களிடம் முன்னேற்றம் இருக்காது.

கண்டுகொள்ளாமல் இருப்பதும் வாயை மூடிக்கொண்டிருப்பதும் ஒன்றே. இவர்கள் வாழ்வுவெறுமை யாகத்தான் இருக்கும். முன்னோக்கி ஓடுவதும், திட்டியவரின் மீது வஞ்சம் கொள்ளாமல், அதையும் தன்னை திருத்திக் கொள்ளும் வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வதும் ஒன்றே. போற்றுவார் போற்றட்டும்.... தூற்றுவார் தூற்றட்டும்... நம் கடமையை தொடர்ந்து செய்வோம் நம் வளர்ச்சியை யாரும் தடுக்க முடியாது.

# சைவம்-வைணவம் இரண்டிலும் தமிழகமே முன்னோடி

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி நாயனார் என்ற நால்வராலும் புகழ்ந்து பாடப்பட்ட ஸ்தலங்களை பாடல்பெற்ற ஸ்தலங்கள் என்று கூறுவார்கள்.

இந்த நான்குபேரால் பாடல்பெற்ற ஸ்தலங்கள் இந்தியா முழுவதும் பரவி கிடக்கிறது. இந்தி யாவை தவிர்த்து இலங்கையிலும் பாடல்பெற்ற ஸ்தலம் இரண்டு உள்ளது. 1. திருக்கோணேச் சரம் 2. திருக்கேதீச்சரம்.

இந்தியாவில் பல சிவன் கோவில்கள் இருந் தாலும், குறிப்பாக பாடல் பெற்ற சிவஸ்தலம் என்று போற்றப்படும் 274 ஆலயங்களில் 266 கோவில்கள் தமிழ்நாட்டில்தான் உள்ளன.

பாடல் பெற்ற 274 ஸ்தலங்கள் அமைந்துள்ள இடங்கள்.

சோழநாட்டில்................................190

பாண்டிய நாட்டில் ...........................14

மலை நாட்டில்..................................1

ஈழநாட்டில்......................................2

கொங்குநாட்டில்...............................7

நடுநாட்டில்....................................22

தொண்டை நாட்டில் .......................32

துளுவநாட்டில் ..................................1

வடக்கில்..........................................5

மேற்கண்ட நால்வரால் பாடப்பெற்ற ஸ்தலங்களில் இறைவன் பல்வேறு திருவிளை யாடல்களை நிகழ்த்தியிருக்கிறான்.

பாடல்பெற்ற ஸ்தலங்கள் தமிழகத்தில்தான் அதிகம் என்றபோதிலும், வைணவஸ்தலங்களாக போற்றப்படும் 108 திவ்ய தேசங்களில் 84 திவ்ய தேசங்கள் தமிழகத்தில்தான் உள்ளது என்பதும் சிறப்பு. சைவம், வைணவம் என்று இரு பிரிவாக பிரிந்திருந்தாலும், இரண்டு பிரிவுகளிலும் அதிக ஆலயம் உள்ளது தமிழகத்தில் மட்டுமே.

எந்த வீட்டில் காலையிலும் மாலையிலும்‘‘துளசி தேவியை’’ வணங்கி வருகிறார்களோ, அங்கு யம தேவன் நுழைய முடியாது. கெட்ட ஆவிகளும் அண்டுவதில்லை.

நாள்தோறும் துளசிக்கு ‘‘தீபமேற்றி’’ பூஜிப்பவர்கள் நூற்றுக்கணக்கான யாகம் செய்ததின் பலனை அடைவர்.

துளசியின் காற்று பட்டாலும், துளசியை வலம் வந்து வணங்கினாலும் எல்லா பாபங்களும்நீங்கும்.

துளசியை தொடுபவர்கள் புனிதம் அடைகிறார்கள். துளசியின் வேர் பக்கம் உள்ள தூசியை நெற்றியிலிடுவது மாபெரும் கவசமாகும்.

பகவான் ஹரிக்கு ஸமர்ப்பிக்கப்பட்ட துளசி தீர்த்தத்தை, பக்தியுடன் ஏற்பவர் கங்கையில் நீராடிய பலனை அடைவர்.

பகவானது தாமரைப் பாதங்களில் சந்தனம் கலந்து துளசி இலையை ஒட்டுபவர், ஒரு லட்சம் அஸ்வமேத யாகத்தை நடத்திய பலனை பெறுவர்.

‘‘துவாதசி’’ தினத்தில் பகவான் துளசியுடன் வசிக்கிறார்.

துளசி இலைகளை பௌர்ணமி, அமாவாசை, துவாதசி, சூர்ய சங்க்ராந்தி, உச்சி மதியம், இரவு, சந்த்யா வேளைகளில் பறிக்கக் கூடாது.

பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹங்கள் மதிக்கப்படுகின்றன ஆனால் பிரதிஷ்டை ஆகாமலேயே மதிக்கப்பட வேண்டியவர்கள் ஸ்ரீமத்பாகவதம், துளசி சாளக்ராம், கங்கை வைஷ்ணவர்கள் ஆவார்கள். இவர்கள் நால்வரும்‘‘ப்ரகாஷ்க் மூர்த்தீகள்’’ என அழைக்கப்படுவர்.

துளசி ஜெயந்தி ‘‘கார்த்திகை பௌர்ணமி’’ ஆகும்.

### துளசியின் பிற பெயர்கள்

ப்ருந்தா, ப்ருந்தாவனி, விஸ்வபூஜிதா, விஸ்வ பவானி, புஷ்பஸரா நந்தினி, க்ருஷ்ண ஜீவானி, ஹரிப்ரியா, கேசப்ரியா, ஸுலபா, வைஷ்ணவி, ஸ்யாமா, ராமா, கௌரி, பஹுமஞ்சரி, அம்ருதா, திருத்துழாய்.

பாற்கடலில் தன்வந்த்ரி பகவான் அம்ருதம் கொண்டுவருகையில் அதில் துளசி தளமும் இருந்தது என ப்ரம்ம வைவர்த்த புராணம் கூறுகிறது.

# துளசி வழிபாட்டின் மகத்துவங்கள்



# வெளிவந்துவிட்டது...






பழனி முருகன்
பற்றிய அற்புத
செய்திகள்,
தரமான இதழ்
அற்புத செய்திகள்

# பழனி முருகன் கோவில் கும்பாபிஷேகம், தைபூச சிறப்பு மலர்

பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளவும்

Cell: 9994323622 9444228203



# கர்ம வினைகளால் ஏற்படும் பிரச்சனையும்

# பழனி முருகனை வழிபடுவதன் தேவரகசியமும்



நீங்கள் உங்களது வாழ்க்கையில் தீராத கஷ்டம், தடைகள், குடும்பத்தில் சண்டை, வருமானம் இல்லாமை, போன்ற பல்வேறு விதமான பிரச்சனைகளை மட்டுமே எதிர் கொண்டு வாழும் சூழ்நிலை இருந்தால் நிச்சயம்இதற்குகர்ம வினைகள் தான் காரணம் ஆகும்

கலியுகத்தில், நாம் செய்த கர்மவினைகளை குறைக்கக்கூடிய மாபெரும்சக்தி முருகப்பெருமானுக்கு உள்ளது.

முருகப்பெருமானைபழனி மலைக்கு சென்று தரிசனம் செய்தால் நம்முடைய கர்மவினைகள் கட்டாயம் குறையும்

கர்ம வினைகளால் ஏற்படும் நம்முடைய பிரச்சனைகள் தீர பழனி முருகனை எப்படி வழிபாடு பூஜை செய்வது என்ற தேவரகசியம் தெரியுமா?

வாழ்வில் தடை போட்டி பொறமை கஷ்டம் போன்ற பல பிரச்சனைகள் விலக ஆண்டி கோலத்தில் இருக்கும் பழனியாண்டவர் முருகனை தரிசனம் செய்வதால் நன்மைகள் பல உண்டாகும்

பழனி முருகப்பெருமானை ஆண்டி கோலத்தில் இருக்கும்போது தரிசனம்செய்தால் நம்மை ஆண்டியாக ஆக்கி விடுவார் என்றும், ராஜ அலங்காரத்தில் இருக்கும் போதும் மட்டுமே தரிசனம் செய்தால் ராஜ வாழ்க்கை கிடைக்கும் என்றும் பலர் சொல்ல கேட்டிருப்பீர்கள்.

ஆனால் உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தீராத துயரத்தை அனுபவித்து வந்தால், அதிகப்படியான தடைகள் உங்களுடைய வாழ்க்கையில் இருந்தால் நீங்கள் பழனி முருகனை தண்டாயுதபாணி கோலத்தில் அதாவது ஆண்டி அலங்காரத்தில் தரிசிப்பது தான் சிறந்தது

முற்றும் துறந்த தவ நிலை, அதாவது அலங்காரம் இல்லாமல் ஆண்டிக் கோலத்தில்பார்க்கும்போது நமக்குள் ஒரு மெய் ஞானம் உண்டாகும் என்பதற்காக. பெரிய ஞானிகளெல்லாம் அந்தக்கோலத்தைக் காண்பதற்காகத்தான் துடிப்பார்கள்.

முற்றும் துறந்தவர்கள், குடும்பத்தில் பல நிலைகளைக் கடந்தவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தை விரும்பிப் பார்ப்பார்கள்.

ஜோதிடப்படி பார்க்கும் போது செவ்வாய் கிரகம் முருகனுக்கு வருகிறார். அதிலும் இந்த

பழனி முருகன் கொஞ்சம் ஞான காரகனாக இருக்கிறார்.

மேலும், இந்தச் செவ்வாயுடன் குருவும் கலக்கிறார். வீரம், தைரியம் இதற்கெல்லாம் உரியது செவ்வாய்.



இந்த வீரமும், தைரியமும் இருந்ததால்தான் எல்லோரையும், எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு அவர் இங்கு வந்து நிற்க முடிந்தது.

ஆனால் நின்ற உடனேயே அங்கு குரு வந்து விடுகிறார். செவ்வாயாக வீராவேசத்துடன் கிளம்பி குருவாக நிற்கிறார்.

வழக்குகளெல்லாம்நடக்கிறது, தீராத நோய்களெல்லாம் இருக் கிறது போன்ற பிரச்சனைகளுக்கு அலங்காரம் இல்லாத முருகனை வணங்குவதே நன்று.



20 வருடமா வாதாடிக் கொண்டிருக்கிறேன். தீர்ப்பு தள்ளி தள்ளிப் போகிறது என்றால் அதற்கு அலங்காரம் இல்லாத ஆண்டிக் கோல முருகன் வழிகாட்டுவார்.

தீராத நோய், மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள், அவ்வளவுதான் என்ற நிலையில் அதற்கும் நீங்கள் முருகனின் ஆண்டி கோலத்தை தரிசிக்கலாம்.

மன குழப்பம் அடைந்து இருக்கிறார்களே, அவர்களையும் இந்த ஆண்டிக் கோல முருகனை வழிபடச் சொல்லலாம்.

அவர்களுக்கு மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுகிறது. இதனைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

பேச இயலாதவர்கள், குறைபாடு உள்ளவர்கள், மன எழுச்சி, மனஉளைச்சல் உள்ளவர்கள் இவர்களெல்லாம் அந்தக் கோலத்தைப் பார்த்தால் ஒரு சாத்வீகம், சமத்துவம் அவர்கள் மனதிற்குள் பாயும்.

நம்மால் முடியாது, மருத்துவரா லும் முடியாது, யாராலும் முடியாது என்பது போன்ற விஷயங்களுக்கெல்லாம் ஆண்டிக் கோலம் மிக மிக உகந்த தரிசனக் கோலம்.

திங்கள் கிழமையில் காலைநேரத்தில்மலையேறி முருகப் பெருமானை ஆண்டி கோலத்தில் தரிசித்தால், உங்களுக்கு வாழ்க்கையில் இருக்கக்கூடிய தடைகள் அனைத்தும் நிவர்த்தியாகி படிப்படியான முன்னேற்றம் மாற்றம் ஏற்படும்.

உங்களுடைய ஜாதகத்தில் பாதிப்பு தரக்கூடிய நிலையில் எந்த கிரகங்கள் இருந்தாலும் அந்த கிரகங்களால் ஏற்படக்கூடிய பாதிப்பு தாக்கம் குறைய வேண்டுமென்றால், அதற்கான ஒரே தீர்வு பழனி முருகனை ஆண்டி கோலத்தில் திங்கட்கிழமை காலை வேளையில் தரிசனம் வழிபாடு செய்து, பூஜை தானம் தர்மம் அன்ன தானம் போன்றவற்றை செய்தால் உங்களது வாழ்வில் நல்ல முன்னேற்றம் நன்மைகள் பல கிடைக்கும்.

# மறுபிறவி இல்லாதவர்கள் யார்...?

மரணத்தோடு ஒரு மனிதனின் வாழ்க்கை முற்றுப் பெறுவதில்லை. அது மேலும் மேலும் மறு பிறவிகளாக தொடரவே செய்கிறது.

யாருக்கு மறுபிறவிகள் ஏற்படாது என்ற சந்தேகம் அனைவருக்கும் இருக்கும்.

இதற்கு சாஸ்திரங்கள், கடோபநிஷதம், கருட புராணம், போன்றவை மறுபிறவி, பற்றிய சில செய்திகளை குறிப்பிடுகின்றன. அவை:

இது கர்ம பூமியாதலால் தங்களது கர்மத்தை அனுபவிக்கவே உயிர்கள் பிறப்பெடுக்கின்றன. அவற்றை முற்றிலுமாக அனுபவித்து விட்டு, இனி அனுபவிக்க சஞ்சித கர்மா, பிராரப்த கர்மா, ஆகாம்ய கர்மா என ஏதும் இல்லாதவர்களுக்கு மறுபிறவி ஏற்படுவதில்லை.

பொதுவாக பூமியில் அனுபவிக்க வேண்டிய அனைத்தையும் அனுபவித்து முடிந்தவருக்கு மீண்டும் மறுபிறவி ஏற்படுவதில்லை.

இவ்வுலக ஆசைகள் ஏதும் இல்லாமல், பற்றற்ற வாழ்க்கை வாழ்பவர்களுக்கும், தவ யோகிகளுக் கும் மறுபிறவி இல்லை.

சிறந்ததவத்துடனும்பக்தியுடனும்வாழ்ந்து, இறைவன் ஒருவனையே தங்கள் பற் றுக் கோடாகக் கொண்டு, தாங்கள் செய்யும் செயல்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்பவர்களுக்கு மறுபிறவி இல்லை.

தாங்கள் செய்த பாவக் கணக்கும், புண்ணியக் கணக்கும் சரியாகி கழிக்க ஏதும் கர்மவினைகள் இல்லாதவருக்கு மறுபிறவி ஏற் படுவதில்லை.

தன்னலம் கருதாது வாழ்ந்து மறைந்த மகான் களுக்கு மறுபிறவி இல்லை. இறைவனின் கட்ட ளைப்படி மட்டுமே அவர்களது மறு அவதாரம் நிகழும்.

பந்தம், பாசம், மோகம், அகந்தை, காமம் போன்ற மன அழுக்குகளிலிருந்து விடுபட்டு, இவ்வுலக வாழ்வை வெறுத்து, இறைவனையே சதா தியானித்து, அவன் நாமத்தையே எப்போதும் கூறி வரும் உண்மையான பக்தர்களுக்கு மறு பிறவி ஏற்படுவதில்லை.

எல்லா ஆசைகளும் தீர்ந்தாலும் சில கர்ம எச்சங்களை மட்டும் கழிக்க இயலாமல், அதற் கேற்றவாறு உடல்நிலை, ஆயுள்நிலை இடம் தராது இறந்து போனவர்கள் மீண்டும் பூமியில் மறுபிறவி எடுக்கிறார்கள்.

அவர்கள் சில காலம் மனிதனாகவோ அல்லது மிருகங்களாகவோ வாழ்ந்து விட்டு, தங்க ளது கர்மக் கணக்குகளை நேர்செய்த பின் மரணிக் கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் மறுபிறவி என்பது ஏற்படாது. இது போன்ற பலகாரணங்கள் மறுபிறவி எடுப்பது பற்றி நமது சாஸ் திரங்களில் கூறப்பட்டுள்ளன.



நமது சாஸ்திரங்கள் கூறும் முறைப்படி பர மாத்மா விலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாக்கள் அனைவரும், ஏதாவது ஒரு காலத்தில் அந்தப் பரமாத்மாவோடு இணைந்துதான் ஆக வேண்டும்.

அது ஒரு பிறவியிலும் நிகழலாம். அல்லது அதற்கு ஓராயிரம் பிறவி கள் எடுக்க வேண்டியும் வரலாம். அது அந்த அந்த ஆன்மாவின்பரி பக்குவத்தைப் பொறுத் தே நிகழ்கிறது என சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

# நவகிரக தோஷம்



ஒருவர் முற்பிறவியில் செய்த நற்செயல்கள் இந்தப் பிறவியில் நன்மைகளாகவும், முற்பிறவியில் செய்த தீமைகள் இந்தப் பிறவியில் தோஷங்களாகவும், கஷ்ட நஷ்டங்கள் ஆகவும் ஜாதகத்தில் மனிதர்களுக்கு வந்தடைகின்றன.

இந்த நன்மை தீமைகளை நவகிரகங்கள் வாயி லாக மனித வாழ்க்கை முறைகளை தீர்மானிக் கிறது. இதனால் மனிதர்களுக்கு நன்மைகள் மற்றும் தீமைகள் நடக்கின்றன.

முற்பிறவி பயனை இப்பிறவியில் நவகிரகங்கள் மூலம் அனுபவிப்பதை நவகிரக தோஷம் என்றும் கூறலாம், இப்பிறவியில் இறைப் பற்றின் மூலம், நவகிரக தோஷத்தின் வீரியத்தை த்து செயலையும் நன்மையாகவே செய்யப் பழகுவோம், தீய செயலை செய்து அதற்கு பரிகாரம் செய்வதை விட நல்ல செயலைத் தொடர்ந்து செய்தால் இப்பிறவி மட்டுமல்ல அடுத்த ஏழு பிறவிக்கும் நம் வாழ்வில் நன்மையையே தருவார்கள் நவ கிரகங்கள்.

# லட்சுமி கடாட்சம் தரும் கோமதி சக்கரம்



கோமதி சக்ரம் என்பது ஒரு அரிய இயற்கை சக்ரம். இந்தியாவில் குஜராத்தின் ஒரு பகுதியான துவாரகாவில் உள்ள கோமதி ஆற்றில் கோமதி சக்கரம் காணப்படுகிறது.

கோமதி சக்ரம் பகவான் கிருஷ்ணரின் தெய்வீக ஆயுதத்தை ஒத்திருக்கிறது. இது அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும்.

கோமதி சக்ராவின் நன்மைகள்:

● செழிப்பு, ● மகிழ்ச்சி, ● நல்ல ஆரோக்கியம், ● போதுமான செல்வம், ● தீய விளைவுகளிலிருந்து பாதுகாத்தல், ● நோயைக் குணப்படுத்த உதவுங்கள் ● மன அமைதி, ● அதிக உணர்வு, ● சிறந்த பக்தி, ● அனைத்து வகையான பாதுகாப்பு, ● சமுதாயத்தில் மதிப்புமிக்கவர், ● நிதி வளர்ச்சி, ● வணிக வளர்ச்சி, ● குழந்தைகளின் பாதுகாப்பு, ● வழிபாட்டின் சக்தி.

www.aanmeegamalar.com

# முயலுக்கு முக்கியத்துவம் தரும் சீன புதுவருடம்




முயல் சீன சோதிடத்தின் நான்காவது குறி ஆகும். 1927, 1939, 1951, 1963, 1975, 1987, 1999, 2011, 2023, 2035 ஆகிய வருடங்கள் முயல் வருடம் ஆகும். இந்த வருடத்தில் பிறந்தவர்கள் அமைதியும், கலை நயமும், நீண்ட ஆயுளும் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பது சீன சோதிடத்தின் கணிப்பு ஆகும்.

முன்பு ஒரு காலத்தில் முதல் வருடக்குறியாக யார் வருவது என்பதில் விலங்குகளுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. இதற்கு தீர்வாக கடவுள் ஒரு நீச்சல் போட்டியை அறிவித்தார். இதில் எலி, எருது, புலி ஆகியவற்றை தொடர்ந்து முயல் நான் காவதாக வந்தது. வலு குறைவான பிராணியாக இருந்தபோதும், ஆற்றின் குறுக்கே இருந்த பாறைகள் மற்றும் மரக்கட்டைகள் ஆகியவற்றின் மீது தாவித்தாவியே சுலபமாக முயல் நான்காவது இடத்திற்க்கு வந்தது. இதனால் முயலை கடவுள் நான்காவது வருடக்குறியாக அறிவித்தார்.

முயல் நான்காவது சீன சோதிட குறியாக குறிப்பிடப்படுவதின் காரணமாக, சீனாவில் கூறப்படும் கதை இது.

# ஐயப்பனுக்கு கம்புக் கூழ் கொடுத்த குடும்பம் ஹரிவராசனம் பாடலில் உறங்கவைத்த தலைமுறை



இவர்தான் சபரிமலை ஐயப்ப சாமிக்கு உறங்கும்பாட்டு ஹரிவ ராசனம் பாடலை இயற்றியவர்.

சபரிமலையில் ஐயப்பசாமியை உறங்க வைக்கும் ஹரிவராசனம் விஸ்வமோகனம் எனும் உறக் குப்பாட்டு அத்தாழப்பூஜை முடிந்த பின் நடை சாத்தும் பாடலாக ஒலிக்கும். இந்தப் பாடலை இயற்றியவர் தமிழகத்தைச் சேர்ந்த கம்பங்குடி ஸ்ரீ குளத்து ஐயர். இவர் 1920 ஆம் வருடம் இந்தப் பாடலை இயற்றினார்.

இவர் திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சி எனும் ஊரில் பிறந்தவர். கம்பங்குடி சுந்தரம் குளத்து ஐயர் பிரசுரித்த சாஸ்தா ஸ்துதி கதம்பம் என்ற புத்தகத்தில் உள்ளது ஹரிவராசனம் கீர்த்தனம்.

இவர் ஹரிவராசனம் பாடலை ஐயப்பசாமியை தரிசிக்கும்போது எழுதினார். ஒவ்வொரு வரி களும் ஐயப்ப சாமியே அருளியது போல இருந்த தாக அவர் கூறியுள்ளார்.

இவரது முன்னோர்கள் மிகவும் கஷ்டப்பட் டாலும், இவர்களது வீட்டின் வழியாக போவோர் வருவோருக்கும், இல்லாதவர்களுக்கும் உண வளித்து வரும் பழக்கத்தை கடைபிடித்துவந்தனர்.

அப்போது ஐயப்பசாமி, தாயின் தலைவலி போக்கப் புலிப்பாலை எடுக்க அந்த வழியாக வந்துள்ளார். அப்போது மிகவும் களைப்புடன் இருந்த ஐயப்பன் அந்த குடும்பத்தைப் பற்றி கேள்விப்பட்டு வந்து உணவு கேட்டுள்ளார். உணவு ஏதும் இல்லாததால் வீட்டில் இருந்த கம்பு தானியத்தை கூழாக செய்து உணவளித்தனர். அதனாலதான் அவர்களது குடும்பம் கம்பங்குடி என அழைக்கப்பட்டது.

அந்த பூர்விகமான குடும்பத்தில் பிறந்தவர்தான் ஹரிவராசனம் பாடலை இயற்றிய கம்பங்குடி ஸ்ரீ குளத்து ஐயர்.

இந்தப் பாடல் வழக்கத்திற்கு வருவதற்கு முன், சபரிமேலையில் சாந்தியாக இருந்த செங்கன்னூர் கிட்டுமணி திருமேணி

நம்பூதிரி புல்லாங்குழல் வாசித்து நடை சார்த்துவது நடப் பில் இருந்தது.

1950–களில் சபரிமலை ஐயப் பன் கோவில் தீக்கிரையாகி பின் தேவபிரசன்னம் பார்க்கப்பட்டு சபரிமலை கோவிலை மீண்டும் 1951 புனரமைத்தனர்.

அப்போது கோவில் மேல் சாந்தியாக இருந்த ஈஸ்வரன் நம் பூதிரி ஹரிவராசனம் கீர்த்தனம் இரவு அத்தாழப் பூஜையில் ஐயப்பசாமி முன் நின்று ஸ்லோகம் போன்று சொல்வதை மாற்றி னார்.

இது ஐயப்பசாமியை உறங்கவைக்கும் பாடல் போல உள்ளதாகக் கருதி, அத்தாழ பூஜை (இரவு பூஜை) முடிந்து நடை சாத்தும் பாடலாக மாற்றினார்.

மேல் சாந்தியாக இருந்த ஈஸ்வரன் மற்றும் கோவில் ஊழியர்களும் ஹரிவராஸனம் பாட ஆரம்பித்த வழக்கம், ஏசுதாஸின் இனிய குரலில் இந்தப் பாடல் வெளிவந்த பிறகு அந்த இசைத்தட்டை இசைப்பதாக மாறியது.

கே.ஜே. யேசுதாஸ் 1975 ஆம் ஆண்டு தமிழ், மலையாளம் மொழிகளில் வெளிவந்த "சுவாமி ஐயப்பன்" திரைப்படத்தில் முதன் முறையாக இந்தப் பாடலை பாடினார்.

அதற்கு தேவராஜன் என்பவர் இசையமைத்தார். அந்த மெட்டில் அமைந்த ஹரிவராசனம் பாடல் தான் இன்றுவரை சபரிமலையில் நடைசாத்தும் பாடலாக ஒலிக்கிறது.

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD free

இதுவரை வெளிவந்த

150 க்கும் மேற்பட்ட இதழ்களை



aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.



# சிந்தலக்கரை ஸ்ரீவெட்காளியம்மன்

தூத்துக்குடி மாவட்டம், எட்டையாபுரத்தில் இருந்து எட்டுக்கிலோ மீட்டர் தூரத்தில்அருப்புக் கோட்டை செல்லும் பாதையில் உள்ளசிந்தலக் கரை என்ற ஊரில் அமைந்துள்ளது.ஸ்ரீவெட்காளி யம்மன் ஆலயம். வெட்டவெளியில் அமைந்துள்ள

இந்த ஸ்ரீ வெட்காளியம்மனே உலகிலேயே மிக உயரமான காளி சிலையாக இங்கு காட்சி யளிக்கின்றாள்.

இந்த ஸ்ரீ வெட்காளியம்மனின் உயரம் 42 அடியாகும்! இந்தச் சிந்தலக்கரை காளி கோயி லையும் காளி சிலையையும் உருவாக்கியவர், அம்மன் பாலகர் ராமமூர்த்தி சுவாமிகள் ஆவார்.

1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி இந்த இடத்தில் ராமமூர்த்தி சுவாமிகளுக்குக்காளி யானவள் பத்துக் கைகளுடன் கூடிய நவசக்தியாய் காட்சி அளித்தாளாம். அதன் பிறகு அம்மன் காட்சி அளித்த இடத்திலேயே அம்மனுக்குச் சிலை அமைக்கப்பட்டது.

இந்தக் காளிக்கு மற்ற காளியம்மனுக்கு உயிர்ப்பலி கொடுப்பது போலப் பலிகொடுப்பது இல்லை.

இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி ஆகிய முப்பெரும் சக்தியும் இணைந்த ஒரு மாபெரும் சக்தியாக இந்த ஸ்ரீ வெட்காளியம்மன் திகழ் கின்றாள்.

எனவே இந்த ஸ்ரீ வெட்காளியம்மனை வணங்குவதால் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் ஒரு சேரக் கிடைக்கும் என்பது இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கை ஆகும்.

இந்த வெட்காளி அம்மன் ஆலயத்தைச் சில தொழில் அதிபர்களின் உதவியுடன் நிறுவி 1992ம் ஆண்டு ஆனிமாதம் 10ம் தேதி கும்பாபிஷேகம் செய்தார் ஸ்ரீ ராமமூர்த்தி சுவாமிகள். இந்த ஸ்ரீ வெட்காளி அம்மன் பத்துக் கரங்களுடன் தெற்கு நோக்கி நின்ற நிலையில் அருள்பாலிக்கிறாள்.

“எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்ற கொள்கையின் படி, இந்தக்காளி யம்மனுக்கு உயிர்ப்பலி கொடுப்பதை தவிர்க்க, தன்னையே அறுங்கோண நட்சத்திரச் சட்டத்தில் நிறுத்தி கைகளிலும், கால்களிலும் ஆணியை அடித்து தன்னைத்தானே வருத்திக்கொண்டதாகக் கூறுகிறார்.

ராமமூர்த்தி சுவாமிகள். இங்கு பாற்கடலில் பள்ளி கொள்ளும் மிகப்பெரிய விஷ்ணுசிலையும் நிறுவப்பட்டுள்ளது.

இத்திருத்தலத்தில் சித்ரா பௌர்ணமிஅன்று வேள்வி பூஜையும், 1008 கலசங்களில் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டு காளியம்மனுக்கு சித்ரான்னங்களுடன் சிறப்புப் பூஜையும் நடை பெறும்.

ஆனிமாதம் கடைசிச் செவ்வாய்க்கிழமையன்று சண்டி வேள்வி பூஜையும், பால் அபிஷேகமும் நடைபெறும். அன்று 16 அடி நீளமுள்ள திரிசூல அலகு குத்தி, வெங்கல தீச்சட்டி ஏந்தி, 42 அடி நீளமுள்ள பூக்குழியில் ராமமூர்த்தி சுவாமிகள் இறங்குவார்.

இந்த ஆலயத்தில் புரட்டாசி மாதம் நவராத்திரி பூசையும், தை மாதத்தில் ராமமூர்த்தி சுவாமிகள் பூமிக்கடியில் மேற்கொள்ளும் பூமிதவ பூஜையும்

நடைபெறுகின்றன.

வெட்ட வெளியில் நிற்கும் இந்த வெட்காளியம்மனை வழிபட உள்ளூர் பக்தர்கள் மட்டுமன்றி, வெளியூர் பக்தர்களும் வெளி மாநிலப் பக்தர்களும், வெளிநாட்டுப் பக்தர்களும் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

இங்கு ஸ்ரீராமமூர்த்தி சுவாமிகள் தவசித்தர் பீடம் அமைந்துள்ள இடத்தில்தான் சூரிய ஒளிக் கதிர்களை 24 மணி நேரமும் பதிவு செய்யும் தேசிய பௌதீக ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது. இந்த விஞ்ஞான கூடம் தலைநகர் டெல்லியில் உள்ள வி.எஸ்.ஆரின் நான்காவது கிளை தேசிய சோதைனைக் கூடம் விண்வெளி ஆராய்ச்சிக்கு உலகின் புகழ் பெற்ற என்.ஜீ.ஆர்.ஐ (N.G.R.I) என்ற ஸ்தாபனத்தின் கீழ் செயல்படுகிறது.

இது பூமியில் காந்த சக்திகள் எவ்வாறு மாறுபடுகிறது என்பதை அளக்கும் இடம். இது பூமியின் வடக்குதெற்கு துருவ காந்த சக்தி சமமாகக் காணப்படும் இடம். உலகின் சீதோஷ்ண நிலைமை, பருவ மாற்றங்கள், இயற்கையின் சீற்றங்கள் அனைத்தையும் கணக்கிடலாம். உலக விஞ்ஞானிகள் அற்புதங்கள் நிகழ்த்தும் காந்த சக்தி, சூரிய சக்தி சங்கமிக்கும் இடமாக இதைத் தேர்வு செய்துள்ளார்கள்.

இந்த ஆய்வுக்கூடத்தின் ஒட்டிய நிலத்திலேயே அன்னை காளிபராசக்தியின் தவசித்தர் பீடம் அமைந்துள்ளது. ஆன்மீகமும், விஞ்ஞானமும் ஒரே இடத்தைத் தேர்வு செய்துள்ளது மிகப் பெரிய ஆச்சரியமாகும்.

சக்தியின் விளக்கம் என்ற பாடலில் பாரதியார் கூறுகிறார் :

மூலப் பழம் பொருளின் நாட்டம்இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்
காரிப் பெருங்களத்தின் மீதேளங்கள்
காளி நட மூலகக் கூட்டம்

ஆம். காளி தன் கடைக்கண் பார்வையில் சக்திகள் கூடும் இந்த இடத்தை தன் பாலகன் ஸ்ரீராம மூர்த்தி சுவாமிகள் மூலம் தேர்வு செய்து கொண்டாள்.

இத்தகைய சிறப்பு மிக்க இந்த ஸ்ரீ வெட் காளியம்மனை நாமும் வழிபட்டு உயர்வடை வோமாக.



# பல நோய்களை தீர்க்கும் ஒரே மருந்து

- வெந்தயம் 250 gm
- ஓமம் 100 gm
- கருஞ்சீரகம் 50 gm

மேலே உள்ள 3 பொருட்களையும் சுத்தம் செய்து அதை தனியாக கருகாமல் வறுத்து, தூள் செய்து ஒன்றாக கலந்து ஒரு கண்ணாடி குடுவையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இக் கலவையை ஒரு ஸ்பூன் அளவு இரவு நேரத்தில் வெதுவெதுப்பான நீரில் உட்கொள்ள வேண்டும்.



இதைசாப்பிட்ட பின்பு எந்த உணவும் சாப்பிடக்கூடாது.

தினசரி இந்த கலவையை சாப்பிடுவதால் நம் உடலில் தேங்கி இருக்கும் அனைத்து நச்சு கழிவுகளும் மலம், சிறுநீர் மற்றும் வியர்வை மூலம் வெளியேற்றப்படுகிறது.

- தேவையான கொழும்பு எரிக்கப்பட்டு தேவையற்ற கொழுப்பு நீக்கப்படுகிறது.
- இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு சீரான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்துகிறது.
- இரத்த குழாய்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்படுகிறது.
- இருதயம் சீராக இயங்குகிறது.
- சருமத்தில் உள்ள சுருக்கங்கள் நீக்கப் படுகிறது.
- உடலில் உறுதியும், தேக மினுமினுப்பும், சுறுசுறுப்பும் உண்டாகிறது.
- எலும்புகள் உறுதியடைந்து எலும்பு தேய் மானம் நீங்குகிறது.
- ஈறுகளில் உள்ள பிரச்சனைகள் நீக்கப்பட்டு பற்கள் வலுவடைகிறது.
- கண் பார்வை தெளிவடைகிறது.
- நல்ல முடி வளர்ச்சி உண்டாகிறது.
- மலச்சிக்கல் நீங்குகிறது.
- நினைவாற்றல் மேம்படுகிறது.
- கேட்கும் திறன் அதிகரிக்கிறது.
- பெண்கள் சம்மந்தப்பட்ட நோய்கள் நீங்கு கிறது.
- மருந்துகளின் பக்க விளைவுகள் நீக்கப் படுகிறது.
- ஆண், பெண் சம்மந்தமான பாலியல் பல வீனங்கள் நீக்கப்படுகிறது.
- நீரிழிவு நோய் பராமரிக்கப்படுகிறது.
- இந்த கலவையை 23 மாதங்கள் தொடர்ந்து சாப்பிடும் போது நாட்பட்ட வியாதிகள் அனைத்தும் குறைகிறது.




ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம் இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

150 இதழ்களையும்

இலவசமாக டவுன்லோடு செய்ய கீழே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்யவும்...

Scan to Read- aanmeegamalar E-magazine



மாதம் தோறும் 2 புத்தகங்கள்
மலர்-3 இதழ்-68 ஜூன் 16-30 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
e- magazine
ஆன்மிகமலர்
மெயில் புக்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மாதமிருமுறை
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்
ஆன்மிகமலர் mobile app
Google Play
சிவ அதிர்வை தரும் வில்வ இலை பூஜை
சனிதோஷம், தீயசக்திகளை விரட்டும் மூத்ததேவி வழிபாடு
மழை வேண்டி இறைவனிடம் கூட்டு பிரார்த்தனை செய்யுங்கள்
முதல்வர் அறிவிப்பு: சென்னையில் கொட்டிய மழை
ஆன்மீக e-magazine
படியுங்கள் இலவசமாக
aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# வாலாஜாபேட்டை ஸ்ரீதன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் பொங்கல் மற்றும் சனிப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடு





வாலாஜாபேட்டை, ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர். ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி நித்ய ஹோமங்கள், சிறப்பு ஹோமங்கள் நடைபெற்று வருகிற போதிலும் அவ்வப்போது இந்து சமய விழாக்களும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருவதும் வழக்கம்.

அந்த வகையில் தமிழர் திருநாளானதைப் பொங்கல், சமத்துவ பொங்கலுடன் சமய நூல் வழங்கும் விழாவாக ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது. அதன்படி இன்று ஜனவரி 15ம் தேதி தைப்பொங்கலை முன்னிட்டு 18 வது ஆண்டாக சமத்துவ பொங்கலுடன் சமய நூல் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவை ஒட்டி 16 புதுப்பானைகளில் சமத்துவ பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது. பின்னர் ஸ்வாமி தரிசனத்திற்கு வந்த பக்தர்களுக்கு பகவத் கீதை உள்பட சமய நூல்களுடன், பொங்கல் பிரசாதமும், ஆசிகளையும் பீடாதிபதி டாக்டர்.ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் வழங்கினார்.

தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு தன்வந்திரி பீடத்தில் உள்ள ஸ்ரீ அஷ்டகால மகா பைரவர், ஸ்ரீ சொர்ணாகர்ஷண பைரவர்க்கு சிறப்பு ஹோமம், அபிஷேகமும், ஸ்ரீ அஷ்ட கால மகா பைரவருக்கு வடை மாலை சாற்றியும் பூஜைகள் நடைபெற்றது.

சனிப்பெயர்ச்சி

திருக்கணிதப்படி ஜனவரி 17ம்தேதி அன்று நடைபெறும் சனிப்பெயர்ச்சி. இந்த பெயர்ச்சியில் சனிபகவான் மகர ராசியிலிருந்து, கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார்.

சனிப்பெயர்ச்சியில், சனி பகவான் ஏழரை சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி, கண்டச்சனி ஆகியவையாக வரும் காலங்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில், உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் 4 இன்ச் உயரத்தில் தங்கத்தினால் ஆன சொர்ண (துங்க) சனீஸ்வரராக காட்சி தருகிறார். மேலும் இந்த சொர்ண (துங்க) சனீஸ்வரர் 20 அடி அகலம், 27அடி நீளத்தில், 10 அடி ஆழ பாதாளத்தில் சன்னதி கொண்டு, ஸ்ரீ பாதாள சொர்ண ( துங்க) சனீஸ்வரராக பக்தர்களுக்கு காட்சி அளித்து அருள்புரிந்து வருகிறார்.

வேறு எங்கும் இல்லாத வகையில் சிறப்புகளுடன் அமைந்துள்ள இந்த சனீஸ்வரர்களுக்கு சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு வருகிற ஜனவரி 17ம்தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல்8 மணிக்குள் சனிப்பெயர்ச்சி மஹா யாகமும், சிறப்பு அபிஷேகம், பூஜைகளும் நடைபெறுகிறது.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



# கல்யாண பாக்கியம் தரும் நந்தியம்பெருமான்

நந்தி கல்யாணம் முந்தி கல்யாணம் என்பது சான்றோர் வாக்கு. நந்திக் கல்யாணம் பார்த்த வருக்கு முந்தித் திருமணம் ஆகும் என்பது இதன் பொருள்.

அதன்படி நந்திக் கல்யாணத்தை பார்ப்பவர் களுக்கு அடுத்த வருடம் நந்திக் கல்யாணம் நடைபெறுவதற்கு முன் திருமணம் நடைபெற்று விடும் என்கின்றனர்.

ஆம், இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த நந்தி கேஸ்வரரின் தெய்வீக திருமணம் ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் வரக்கூடிய புனர்பூச நட்சத்திரத்தன்று இந்த சிறப்பு வாய்ந்த திருமணம் நடைபெறுகிறது.

அரியலூர் மாவட்டம் திருமழபாடி திருசுந்தராம் பிகை சமேத வைத்தியநாத சுவாமிதிருக்கோயி லில் இந்த தெய்வீக திருமணம் வருடாவருடம் நடைபெறுகிறது.

**மணமகன்:** பிரதோஷ நாயகரான நந்தியம் பெருமான்

**மணமகள்:** வசிஷ்ட முனிவரின் பேத்தியும் வியாக்ரபாத முனிவரின் மகளுமானசுயசாம்பிகை.

இந்த ஸ்தலமானது, திருமால் இந்திரன் ஆகியோரால் வழிபாடு செய்யப்பட்டது மேலும் திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகியோரால் திருப்பதிகங்கள் பாடியும் வழிபாடு செய்யப்பட்ட ஸ்தலமாகும்.

தஞ்சாவூர் மற்றும் லால்குடியில் இருந்து 28 ரிவி தூரத்திலும் மற்றும் திருவையாறில் இருந்து 16 கிலோமீட்டர் தொலைவிலும் புள்ளம்பாடியில் இருந்து சுமார் 20 கிலோமீட்டர் தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

கிழக்கு திசை நோக்கி 7 நிலை ராஜ கோபுரத் துடன் கம்பீரமாக காட்சி தரும் இக்கோயிலில் மூன்று திருச்சுற்றுகள் உள்ளன தலவிருட்சமாக பனை மரம் உள்ளது நடராஜர் மண்டபம் அருகில் திரு நந்திகேஸ்வரர் தனது மனைவி சுயசாம்பிகையுடன் காட்சி தருகிறார்.

திருமணத்திற்கு முதல் நாள் நந்தியம்பெருமான் பிறப்பு விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது விழாவின்போது, பலவகை அபிஷேகங்கள் நந்தியம் பெருமானுக்கு செய்விக்கப்படுகிறது அன்று மாலை திருவையாறு கோயிலில் அவருக்கு பட்டாபிஷேகமும் நடைபெறுகிறது.

திருமணம் நடைபெறும் நாளன்று காலை ஐயாறப்பர் அறம் வளர்த்த நாயகியுடன் கண்ணாடி பல்லக்கிலும், நந்தியம்பெருமான் பட்டுச் சட்டை



அணிந்து கையில்செங்கோல் ஏந்தி வெள்ளியில்ஆனதலைப் பாகை அணிந்து மாப்பிள்ளை கோலத்தில் குதிரை வாகனத்திலும் அமர்ந்து வானவேடிக் கை இன்னிசை கச்சேரி உடன் புறப்படுகின்றனர்.

அன்று மாலை கொள்ளிடம் ஆற்றில் இறங்கி திருமழபாடி வந்தடைகின்றனர். அங்கு கண்ணாடி பல்லக்கில் வீற்றிருக்கும் சுந்தராம் பிகை உடனுறை வைத்தியநாதசுவாமி மங்கள வாத்தியங்கள் முழங்க மாப்பிள்ளை வீட்டாரை எதிர்கொண்டு அழைத்து அவர்களை வரவேற்று கோயில் முன் உள்ள திருமண மேடைக்கு அழைத்துச் செல்கின்றனர்.

திருமண மேடையில் சுயசாம்பிகை தேவிக்கும் நந்தியம் பெருமானுக்கும் அனைத்து விதமான அபிஷேகங்கள் நடைபெறுகின்றது.

தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க நாதஸ்வர இன்னிசையுடன் சுந்தராம்பிகை உடனுறை வைத்தியநாதசுவாமி மற்றும் திருவையாறு அறம் வளர்த்தநாயகி உடனுறை ஐயாரப்பர் முன்னி லையிலும் பல்லாயிரக்கணக்கான பக்தர் களுக்கு முன்னிலையிலும் மணமகள் கழுத்தில் மணமகன் தாலி கட்டுகிறார்.



திருமணம் முடிந்ததும் மண மக்களுக்கு தீபாராதனை காட்டப் படுகிறது தொடர்ந்து இருவரும் திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்ற பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றனர்.

இறைவனே முன்நின்று திருமணத்தைநடத்தி வைப்பதால் நந்தியம் பெருமான் திருமணத்தை காணும் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் திருமண தடைகள் நீங்கி காலத்தே திருமணம் கை கூடிவரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை ஆகும்.


ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# கல்வி, வித்தை, ஞானம் அனைத்திற்கும் அதாரம் மாதங்கி

தை மாதம் அமாவாசை முடிந்த பிரதமை முதல் ஒன்பது நாட்கள் சியாமளா நவராத்திரி கொண் டாடப்படுகிறது. இது இராஜ மாதங்கி தேவிக்குரிய நவராத்திரி ஆகும்.

இந்த நாளில் சரஸ்வதிதேவியை வணங்கி னால் சரஸ்வதி யோகம் கிடைக்கும். பேசியே ஜெயிக்கலாம்.

சியாமளா தேவி என்பவர் யார் என்று பார்த்தோ மேயானால், மாதங்கியே இராஜ சியாமளா என்றும் மஹா மந்திரினி என்றும் அழைக்கப்படுகிறாள். மதங்க முனிவரின் மகளாகப் பிறந்தமையால் மாதங்கி என்ற திருநாமம் கொண்டாள். இவள் தசமஹாவித்யாவில் ஒன்பதாவது வித்யா ஆவாள்.

வேத மந்திரங்களுக்கெல்லாம் அதிதேவதை என்பதால் மந்திரிணி எனப்படுகிறாள். கல்வி, வித்தை, ஞானம் ஆகிய அனைத்திற்கும் இவளே ஆதாரம்.

லலதாம்பிகையின் கரும்பில் இருந்துதோன்றிய வள். லலிதா திரிபுரசுந்தரியின் மஹா மேரு சாம்ராஜ்யத்தில் இவளே மந்திரி ஆவாள்.

அம்பிகையின் வலப்புறம் அமைச்சராக சியாம ளாவும் இடப்புறம் படைத்தலைவியாக வராகியும் உள்ளனர்.

சியாமளாவின் திருவுருவை லலிதா சஹஸ்ர நாமம் மற்றும் மற்ற தாந்திரக புராணங்கள் வெவ்வேறு விதமாக விவரிக்கின்றன.

**மாதங்கியின் தோற்றம்:**

இராஜ சியாமாளவின் தோற்றத்தை காளிதாசர் தன்னுடைய ஸ்யாமளா தண்டகம் என்ற நூலின் தியானத்தில் அழகாக வருணித்துள்ளார்.

**"மாணிக்ய வீணாம் முபலாலயந்தீம்
மதாலஸாம் மஞ்சுளவாக் விலாஸாம்|
மாஹேந்த்ர நீலத்யுதி கோமளாங்கீம்
மாதங்க கன்யாம் மனஸா ஸ்மராமி||
சதுர்புஜே சந்த்ரகலாவதம்ஸே குசோன்னதே குங்கும ராகஸோனே|
புண்ட்ரேக்ஷு பாஸாங்குஸ புஷ்பபாண – ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத: ||"**

மாணிக்க கற்கள் பதித்த வீணையை வாசிக்கும் விருப்பம் உடையவள். பச்சை நிறம் கொண்டவள். மதங்க முனிவரின் புதல்வி. நான்கு திருக்கரம் உடையவள் பாசம், அங்குசம், மலர் அம்பு கொண்டவள். சந்திர கலை தலையில் அணிந்தவள். குங்கும சாந்தை மார்பில் தரித்தவள் என்று அம்பிகையின் தோற்றத்தை வருணிக்கிறார்.

அம்பிகையின் கையில் கிளியும் இடம்பிடித் திருகின்றது. இது வாக்கு திறமையை குறிக் கிறது. இவளின் நிறம் பச்சை ஆகும். பச்சை புதனுக்குரிய நிறம் இது ஞானத்தை குறிக்கிறது.

சியாமளாவின் அம்சமாக மதுரை மீனாட்சி திகழ்கிறாள். இவளை வழிபடுவதும் மாதங்கியை வழிபடுவதும் ஒன்றே ஆகும்.

சியாமளா நவராத்திரியானது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வெகு விமர்சியாகக் கொண் டாடப்படுகிறது. இந்த சியாமளா நவராத்திரியின் 5வது நாள் பஞ்சமி அன்று சரஸ்வதி தேவி அவதரித்த நாளாகக் கருதப்படுகிறது. எனவே இந்நாளில், வடநாட்டில் விஜயதசமி போன்று குழந்தை களுக்கு வித்யா ரம்பம் செய்வர்.



# வளமான சமாதி

ஒரு துறவியின் சமாதியை பராமரிக்கும் பொறுப்பை ஒரு பெரியவரும் அவரின் மகனும் ஏற்றுக் கொண்டு அதை சுத்தமாகவும் மக்கள் வந்து வழிபடுவதற்கு வசதியாகவும் செய்து வந்தார்கள்.

அவர்களுக்கு வேறு எந்த வேலையும் இல்லாததால் முழு நேர பணியாக ஏற்றுக் கொண்டு அதை செய்து செய்தார்கள் ...

சிறிது சிறிதாக மக்கள் கூட்டம் அதிகமாக வர ஆரம்பித்தது. மக்கள் மிகுந்த பக்தியோடு மகானின் சமாதியை வணங்க ஆரம்பித்தார்கள். மகானின் புகழ் எல்லா இடங்களிலும் பரவ ஆரம்பித்தது மக்கள் கூட்டம் அலை மோதியது.

மக்கள் எல்லோரும் காணிக்கையாக நிறைய பொருட்களையும் காசுகளையும் சமாதியில் செலுத்தியதால் அதை பராமரித்த பெரியவர் பெரும் பணக்காரர் ஆனார். மிகவும் வசதியான வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார்.

சொத்துக்கள் நிறைய சேர்ந்தன. அவருடைய மகனும் பெரியவன் ஆனான். இந்த நிலையில் சொத்துக்கள் மீது மகனுக்கு ஆசை வந்தது. அதை பிரித்துக் கொள்வதில் தந்தைக்கும் மகனுக்கும் போட்டி வந்து விட்டது.

அந்த பெரியவர் மகனை எப்படியாவது அங்கிருந்து விரட்ட நினைத்தார். அவர் அவனிடம் இனிமேல் இந்த சொத்துக்கள் உனக்கு எதுவும்



ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சொந்தமில்லை என்று சொல்லி கொஞ்சம்பொருட் களையும் ஒரு கழுதை குட்டியையும் கொடுத்து,

"நீ எங்கேயாவது போய் இதை வைத்து பிழைத்துக் கொள்" என்று அனுப்பி விட்டார்.

அவனும் வேறு ஒரு ஊருக்கு சென்று அங்கு தங்கினான்.

சிறிது நாட்கள் யோசனை செய்தான் அவனிடம் இருந்த கழுதைக் குட்டியை அடித்து கொன்று அதை ஒரு இடத்தில் புதைத்தான். அவனிடம் இருந்த கொஞ்சம் பொருளைக் கொண்டு அதன் மீது ஒரு சமாதியை கட்டினான்.

அங்கு வந்த மக்களிடம் ஒரு மகான் இந்த இடத்தல் சமாதி அடைந்திருக்கிறார் என்று நம்ப வைத்தான்.

மக்கள் யாரும், அந்த மகான் யார்? என்று கேட்கவில்லை.

பய பக்தியுடன் சமாதியை வணங்கினார்கள்.

சமாதியின் புகழ் ஊரெங்கும் பரவ ஆரம் பித்தது.

மக்கள் தாராளமாக பணத்தையும் பொருட் களையும் சமாதிக்கு வழங்கினார்கள். நிறைய பணமும் பொருட்களும் சேர்ந்தன.

அவனும் மிகுந்த செல்வந்தன் ஆனான். பெரிய பங்களா கார் என்று வசதிகள் வளர்ந்தன.

ஒருநாள் அவன் தனது வயதான தந்தையை சந்திக்க நேர்ந்தது. இவனுடைய வ ச தி யா ன வாழ்க்கையின் நிலையை கண்ட அவர் அவனிடம், "எப்படி பெரிய பணக்காரன் ஆனாய்?!" என்று கேட்டார்.

அவனும் தனது தந்தையிடம் நடந்த அனைத் தையும் விளக்கமாக கூறினான் அவரும் தனது மகனை மிகவும் பாராட்டினார். அவனின் திற மையை வியந்து போற்றினார்.

தனது மகனிடம் அவர், "மகனே நீ இந்த சமாதியில் புதைத்த கழுதைக் குட்டியின் தாய் கழுதைதான் பழைய சமாதியில் அடக்கம் ஆகி இருக்கிறது" என்ற உண்மையைக் கூறினார் ..

மக்கள் எல்லோரும் இப்படித்தான் இருக் கிறார்கள். என்னவென்று எதையுமே விசா ரிப்ப தில்லை எல்லா வற்றையும் உண்மை என்று நம்பி விடுகி றார்கள்....

– ஓஷோ



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

# இறந்த மணமகனை உயிருடன் மீட்ட வாழைமர பாலசுப்ரமணியன்



எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இறைவனே தேடி வந்து குடியிருக்கும் கிராமம் தான் விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள துலுக்கன்குறிச்சி என்ற சிறிய கிராமம். இக்கோவில் சிவகாசியிலிருந்து சங்கரன்கோவில், கழுகுமலை செல்லும் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. சிவகாசியில் இருந்து 17 கிலோ மீட்டர் தூரமாகும்.

ஆன்மிகமலர்

பெயர்க்காரணம்...

150 ஆண்டுகளுக்கு முன்னர் முருகப்பெருமான் மீது அன்பும் ஆழ்ந்த பக்தியும் கொண்டிருந்த வேலாயுதம் என்ற பக்தருக்கு காட்சி கொடுத்து தான் வாழைமரத்தில் குடியிருப்பதாக கூறி அருள்பாலிப்பதால் வாழைமர பால சுப்பிரமணிய சுவாமி எனஅழைக்கப்படுகிறது.

துலுக்கன்குறிச்சி கிராமத்தில் வாழ்ந்த தேரியப்பர்வீரம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தவர் வேலாயுதம்.

இவர் தினமும் அதிகாலை வெம்பக் கோட்டை வைப்பாற்றில் குளித்துவிட்டு வனமூர்த்தி லிங்காபுரம் விநாயகர் கோவிலில் உள்ள முருகனை தரிசித்துவிட்டு அன்றாட பணிகளை செய்வதையே வழக்கமாக கொண்டிருப்பார்.

வைத்திய முறை தெரிந்து வைத்திருந்தார். அங்குள்ள மக்களுக்கு வைத்தியம் செய்வதற்கு பணம் வாங்குவதில்லை. தர்ம சிந்தனையுடன் வைத்தியத்தின் மூலம் நோய் நீக்கியதால் மக்கள் பக்தியை கண்டு சித்தர் என்று போற்றினார்கள்.

வேலாயுதம் வழக்கம்போல் ஒருநாள்அதிகாலை எழுந்து வெம்பக்கோட்டை வைப்பாற்றில் குளித்துவிட்டு முருகனை தரிசனம் செய்ய செல்லும்போது ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் ஆற்றை கடக்க முடியாமல் போனது.

அதனால் முருகனை தரிசிக்க முடியாமல் தன் இல்லம் வந்து விட்டார். அன்று முழுவதும் வேதனையுடன் இருந்தார்.

இரவு முருகனின் திருநாமத்தை சொல்லியவாறு கண் அயர்ந்த போது கந்தன் கனவில் வந்து வேலாயுதா என்னை காண எங்கும் செல்ல வேண்டாம். நானே உன்னை தேடி வந்து விட்டேன். நீ ஆசையாக பராமரித்து வரும் வாழைத்தோட்டத்தில் ஒரே ஒரு குலை





தள்ளிய வாழை மரத்தில் மட்டும்தான் இருப்ப தாக சொல்லி மறைந்தார். மறுநாள் காலை வேளையிலும் குளித்து விட்டு தன்னுடைய தோட்டத்தை நோக்கி ஓடிச் சென்றார் மெய் மறந்து செய்வதறியாது திகைத்து நின்றார். காரணம் கனவில் முருகன் கூறிய படி குலை யுடன் வாழை மரம் இருந்து அதிசயம்கண்டு மனமுருகி வேண்டி நின்றார். இச் செய்தி பரவிய தால் வாழைமரத்தை பக்தர்கள் வழிபட்டனர்.

ஒருமுறை செவல்பட்டி ஜமீன் அரண்மனையில் பிரதான கணக்கு பிள்ளையின் ஒரே மக னுக்கு திருமண விழாவுக்காக அந்த வாழை மரத்தை வெட்டி சென்றனர். ஆனால் வேலாயு தம் வாழை மரத்தை வெட்ட அனுமதிக்க மறுத்து விட்டார். இதனால் மணமகன் தானே நேரில் சென்று வாழை மரத்தை வெட்டிக் கொண்டு வருவதாக கூறி தோட்டத்துக்கு சென்றார்.

அவரிடமும் வேலாயுதம் தான் வாழைமரம் தர முடியாது என்று உறுதியாக கூறினார். ஆனால் வேலாயுதம் சொல்வதைக் கேட்காமல் தன் கையில் இருந்த அரிவாளால் மரத்தை ஓங்கி வெட்டினான்.

அடுத்த கணம் வெட்டிய வாழையிலிருந்து ரத்தம் வெளியேறி நாகமாக மாறி மணமகனின் காலை தீண்டியது. சிறிது நேரத்தில் மணமகன் இறந்துவிட்டான். கணக்குப்பிள்ளை அழுது புரண்டார். தன் மகனை காப்பாற்றுமாறு வேலாயு தம் காலில் விழுந்து கெஞ்சினார்.

என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று முருகனிடம் கேளுங்கள் என கூறினார். நீங்கள் நினைத் தால் காப்பற்றலாம் என வேண்டினார்கள். வேலாயுதம் தன் கையிலிருந்த பிரம்பால் இறந்த மணமகன் மீது முருகா.. முருகா... முருகா.. என 3 முறை திருநாமத்தை கூறிவிட்டார். உடனே ஒரு அதிசயம் நடந்தது,



அழகுராஜா

இறந்த மணமகன் உயிர் பெற்றான். இதை கண்ட ஜமீன்தார் இந்த இடத்தில் வாழை மர பாலசுப்ரமணி யனுக்கு ஒரு கட்டிடம் அமைத்து கொடுத்தார். அதன்படி கோவில் அமைக்கப்பட்டது. கோவி லுக்கு வரும் பக்தர்களுக்கு வேலாயுதம் ஆசி







வழங்கினார். அருள்வாக்கு கூறி அனை வருக்கும் நன்மைகள் செய்து வந்தார். இவரது காலத்திற்கு பின்பு அவருடைய மகன் தேரியப்பர் கோவில் திருப்பணியை செய்து வந்தார். ஒருமுறை ஏற்பட்ட திடீர் புயல் மழை நாள் வெள்ளத்தால் கோவில் இடிந்து போனது. இடிந்துபோன கோவிலை புதுப்பிக்கும் வண்ணம் சிறிய அளவில் கோவில் கட்டப்பட்டது.

தேரியப்பர் வாரிசுதாரர்கள் பிழைப்புக்காக வெளியூர் சென்றுவிட கோவில் பராமரிப்பின்றி சிதிலமடைந்து ஆண்டுக்கு ஒரு முறை வைகாசி விசாகம் தோறும் பால்குடம் எடுத்து வழிபட்டு வருகின்றனர். வாயு மூளையில் உற்சவர் சிலை அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் புன்னகை தவழும் முகத்துடன் நின்ற நிலையில் இடது கையை தொடையில் வைத்தபடி வலது கையில் அபய முத்திரை பின்னர் வாழைமரம் இருக்குமாறு அற்புத வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. எத்தனை துன்பங்கள் நம் மனதில் இருந்தாலும் வாழைமர பாலசுப்ரமணியனை பார்த்த மாத்திரத்திலேயே நொடிப்பொழுதில் காணாமல் போகும் படி வசீகரத்துடன் அருள்பாலித்து வருகிறார்.

இது திருமண தோஷம், புத்திர தோஷம் நோய்களை தீர்க்கும் நிவர்த்தி தலமாக அமைந்துள்ளது. திருமண தடை நீங்கவும் குழந்தை பாக்கியம் பெறவும் நோய்நொடி என்று பெருவாழ்வு வாழவும் சகல சவுபாக்கியம் உடன் வாழையடி வாழையாய் வாழ்வாங்கு வாழ்ந்த ஸ்ரீ வாழைமர பாலசுப்ரமணிய சுவாமி ஆலயம் வந்து வணங்கி வளமோடு வாழ்வோம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994323622


அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# கர்வமும் - பக்தியும் உணரவைத்த பரமாத்மா

கிருஷ்ணன் மீது அதித பக்தி கொண்டவன் அர்ஜூனன், பக்தி அதிகமாகும்போது தன்னையறியாமல் கர்வமும் அதிகரிக்கும் என்பது இறைவனுக்கு தெரியும்.

அப்படித்தான் அர்ஜூனனின் பக்தியில் சிறிது கர்வம் கலந்திருப்பதை பல்வேறு சம்பவங்களிலிருந்து கிருஷ்ணர் அறிந்து கொண்டர். இப்படியே சென்றால் அர்ஜூனனுக்கு பக்தி மறைந்து கர்வம் தலைவிரித்தாடும் என்பதை உணர்ந்த கிருஷ்ணர்.

ஆன்மிகமலர் .காம்

உலகத்திலேயே தான் மட்டுமேகிருஷ்ணன் மேல் அதிக பக்தி கொண்டிருப்பதாக அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. இந்த நம்பிக்கை விரல் நகம்போல் அவன் மூளைக்குள் வளர்ந்து, வளர்ந்து கிருஷ்ண பக்தியில் தன்னை மிஞ்ச ஆள் இல்லை என கர்வம் கொள்ளும் அளவுக்குப் பெரிதாக நீண்டது.

ஒரு கட்டத்துக்கு மேல்பகவானாலேயே அவன்கர்வத் தைத் தாங்க முடியவில்லை. அர்ஜூனனுக்குப் பாடம் புகட்டமுடிவு செய்துகொண்டார்.

ஒருநாள் மாலை நேரம், துவாரகைக்கு வந்து தங்கியிருந்தான் அர்ஜூனன்.

அர்ஜூனனிடம் வந்து, “அர்ஜூனா உன்னைவிட என்மீது பக்தி உள்ளவர்களும்உலகில் உள்ளனர் என்பதை இப்போதுதான் அறிந்து கொண்டேன்'' என்றார்.



உலகில் என்னைவிட கிருஷ்ணனான தங்கள் மீது வேறு யாருக்கும் அதித பக்தி இருக்க முடியாது என்று கர்வத்துடன் மீண்டும் கூறினான்.

"அதாவது, சதா சர்வகாலமும் எனக்கு என் நினைப்புத்தான் என்பதை நிரூபிக்க விரும்புகிறாய்...'' என்றான் கண்ணன்

"இதில் சந்தேகம் என்ன கண்ணா? நீயே எனக்கு எல்லாமும்... அதன்படிதானே வாழ்கிறேன்?'' என்றான் அர்ஜூனன்.

"அப்படியானால், என் மேல் செலுத்தும் பக்தியில் உன்னை மிஞ்ச ஆள் இல்லை என்கிறாய்?''

"நிச்சயமாக.''

"தவறு அர்ஜுனா. உன்னையும்விட என் மேல் ப்ரியமுடன் கூடிய பக்தி செலுத்துகிறவர்கள் உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள்.''

"ஏன் பரமாத்மா இந்த விளையாட்டு... அதை நிரூபிக்க முடியுமா?'' என்றான்.

"புறப்படு என்னோடு. அது எந்த தேசம், யார் எவர் என்றெல்லாம் கேட்கக் கூடாது. சம்மதமா?''

அர்ஜுனன் உடன்பட்டான். இருவரும் கிளம்பி னார்கள்.

பகவான் தன் அரண்மனைக்கு வருவார் என்று அந்த அரசர் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவரும் அவர் துணைவியும் சிறுவயது மகனும் கிருஷ்ணரை நெஞ்சார வணங்கி வரவேற் றார்கள். பக்தியோடு உபசரித்தார்கள். பகவான், நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார்.

"உங்களுக்கு என் மீது மாறாத பக்தி உண்டு அல்லவா?''

"ஆம் பெருமானே!''

"நான் ஒன்று கேட்டால் தருவீர்களா?''

"உயிரையும் தருவோம்.''

"சரி. ஆனால், ஒரு நிபந்தனை.''

"என்ன?''

"எனக்கு நீங்கள் தானம் கொடுக்கும்போது, உங்கள் இல்லத்தில் ஒருவர் கண்ணிலும் துளிக் கண்ணீர்கூட வரக் கூடாது.''

"சம்மதம்.''

உடன் வந்திருந்த அர்ஜு னன், அங்கே நிகழ் வதை ஆச்சர்யத் தோடு பார்த் துக்கொண்டிருந்தான்.

"என்ன வேண்டும் பகவானே!'' ஆர்வமும் பரவசமும் குரலில் தொனிக்கக் கேட்டார் அரசர்.

"உங்கள் பாலகனை இரண்டாகப் பிளந்து, அவனுடைய உடலின் வலதுபாகத்தை மட்டும் எனக்குத் தரவேண்டும்.''

"என்ன கொடுமை இது... கண்ணனின் திருவாயில் இருந்தா இந்த வார்த்தைகள்!'' அர்ஜுனன் விதிர்விதிர்த்துப் போனான். ஆனால், அங்கிருந்தவர்கள் முகங்களில் எந்தச் சஞ் சலமும் இல்லை. அர்ஜுனன் ஆச்சர்யத்தோடு பார்த்தான்.

அதே நேரத்தில், பகவான் அங்கிருந்தவர் களின் முகங்களைக் கூர்ந்து பார்த்து ஆராய்ந்து கொண்டிருந்தார். அரசர் முகம் நிச்சலனமாக இருந்தது. அரசியின் முகத்தில் அதே சாந்தம், பரவசம், பக்தி. அந்த இளவரசனான பாலகன்... அவன் முகம்... அவன் கண்ணில்...

"அட... இது என்ன... இளவரசனின் இடது கண்ணில் இருந்து தாரை தாரையாக கண் ணீர்?'' கேட்டார் கிருஷ்ணர்.

அதற்கு அந்தச் சின்னஞ்சிறு பாலகன் பதில் சொன்னான்... `"மன்னிக்க வேண்டும் பரந் தாமா.! நீங்கள் என் உடலின் வலது பக்கத்தைக் கேட்டீர்கள். அது உங்களுக்குப் பயன் படுகிறதே என்கிற திருப்தி ஒருபுறம். ஆனால், உங்க ளுக்குப் பயன்படாமல் வீணாகப் போகி றோமே என என் உடலின் இடது பாகம் வேதனைப்படுகிறது. அதனால் எழுந்தது இந்தக் கண்ணீர்...''

கிருஷ்ணர் அர்ஜுன னைத் திரும்பிப் பார்த் தார்.

அவன்பகவானின் பாதங் களில் வீழ்ந்து கெட்டியாகப் பற்றிக் கொண்டான். "மன்னித்துவிடு கிருஷ்ணா. கிருஷ்ண பக்தி யில் நான் சிறுபிள் ளை. என்னைவிட உயர்ந்தோர் உள் ளார்கள் என்பதை உணர்த்திவிட்டாய். மன்னித்துவிடு...''



# கையில் கிடைக்கும் பொருள்களில் செய்யப்படும் விநாயகப்பெருமான்

## கடவுள் உருவாக்கிய மதம்

பிள்ளையார் வழிபாடு என்பதுஇன்று நேற்று உருவானது அல்ல கல்பகோடி காலமாக மக்கள் மத்தியில் நின்று நிலைத்து தொடர்ந்து வரும் வழிபாடு களில் மிகவும் முக்கியமானது கணபதி வழிபாடாகும். எங்கெல்லாம் ஆலமரம், அரசமரம், வன்னிமரம், வேப்பமரம், ஆற்றங் கரை, குளக்கரை, முச்சந்தி, மலை, சந்து, நாற்சந்தி, வீட்டு மாடங்கள் ஊர் கோடி இருக் கிறதோ அங்கெல்லாம் ஒரு பிள்ளையார் கன ஜோராக வீற்றிருப்பார்.

எண்ணில் அடங்காத விநாயகர் இருப்பது போலவே அவரது திருவுருவமும் எண்ணில் அடங்காத பொருட்களால் தயாரிக்கப்படுகிறது. காலத்திற்கு ஏற்றவாறு மக்கள் கையில் மிக சுலபமாக எந்த பொருள் கிடைக்கிறதோ அதை கொண்டு பிள்ளையாரின் திருமேனியை சமைத்து விடலாம். களிமண், பசும்சானம், பசு வெண்ணெய், பனைவெல்லம், மஞ்சள், கருங் கல், உலோகங்கள், வெள்ளை சலவைகள், அத்திமரம், வெள்ளருக்கன் வேர் ஆகியவற்றால் பெருவாரியான விநாயகர் உருவங்கள் செய்யப்படுகின்றன.

இதில் விழாவிற்கு ஏற்ற பொருளும் பயன்படுத்தபடுகிறது உதாரணமாக பிள்ளையார் சதுர்த்தி நாளில் யாரும் சந்தனத்தாலோ, மஞ்சளாலோ பிள்ளையார் பிடிப்பது கிடையாது. இந்தியா முழுவதும் உள்ள அனைத்து இந்துக் கள் வீடுகளிலும். ஆலயங்களிலும் அன்று களிமண் கொண்டே பிள்ளையாரின் திருவுருவம் செய்யப்படுகிறது, அதே போலவே நமதுதமிழ்நாட்டில் பொங்கல் திருநாள் அன்று பிள்ளை யார் பசுசானத்தில் மட்டுமே செய்யப்படுவார்.

இது தவிர பண்டிகை மற்றும் விஷேச விரத தினங்களில் மஞ்சள்



பிள்ளையாரே வழிபாட்டில் வைக் கப்படுகிறார்.

பொதுவாக கருங்கல் பிள்ளை யாரை யாரும் வீட்டில் வைத்து அதிகமாக வழிபாடு நடத்துவது கிடையாது. கருங்கல் மற்றும் உலோகங்களில் செய்யப்படும் பிள்ளையார் ஆலயங்களிலேயே ஸ்தாபிக்க படுகிறார்கள். இதுதவிர விஷேசமான பொருட்களாலும் பிள்ளையாரின் உருவங்கள் உரு வாக்கபடுகின்றது ஒருவகை நுரை யால் உருவாக்கப்பட்ட வெள்ளை வாரணர் சிலை கும்பகோணத்தில் உள்ள திருவலஞ்சுழி ஆலயத்தில் மக்கள் வழிபாட்டிற்கு வைக்கபட்டிருக்கிறது.


யோகி
ஸ்ரீ ராமானந்த குரு




இப்படி பல பொருட்களாலும் விநா யகர் திருமேனிகள் செதுக்க பட்டாலும் மிக சிரேஷ்டமான விநாயகர் திருவுருவம் என்பது வெள்ளருக்கன் வேரில் உருவாக்கப்பட்டதே என்று பல ஞானிகளும் அனுபூதிமான்களும் சொல்கிறார்கள்.

குறிப்பாக வெள்ளருக்கன் விநாயகரின் தெய்வ நல ஆற்றலை அகத்திய மாமுனிகள் புகழ்ந்து பேசுவதை குறிப்பிட வேண்டும்.

இன்று விநாயகர் சதுர்த்தி விழாவந்து விட்டால் தெருவுக்கு தெரு அவர் உருவத்தை வைத்து சிறப்பு வழிபாடுகள் நடத்த படுகின் றன அப்படி வழிபாட்டிற்கு ஏற்ற விநாயகர் உருவத்தை சில செயற்கை இழைகள் கொண்டு தயாரிக்கிறார்கள்.

குறிப்பாக சொல்வது என்றால் பிளாஸ்டர் ஆப்பாரிஸ் கொண்டு செய்யப்படும் விநாயகர் உருவங் களே அதிகம் பயன்பாட்டில் இருக்கிறது. இந்த பொருளை கொண்டு விநாயகர் உருவங்களை செய்வது சாஸ்திர விரோதமான செயலாகும். களிமண் மற்றும் செம்மண்ணை பயன்படுத்தியே பெரிய விநாயகர் உருவங்கள் செய்ய வேண்டும்.



இலக்கிய உலகில் கவிஅசுரர் என்று புகழப்படும் கச்சியப்ப முனிவர் தாம் இயற்றிய தணிகை புராணத்தில் விநாயகரின் திரு கோலத்தை மிக அற்புதமான கவிநயத்துடன் விளக்குகிறார்.

விநாயகரின் ஐந்து கரங்களில் ஒன்று மோதகம் ஏந்தியும் மற்றொன்று தீர்த்த கலசம் ஏந்தியும் வேறொன்று தந்தத்தை ஏந்தியும் மற்ற இருகைகளில் அங்குசமும் பாசமும் தரித்து காணப்படுவது ஏன் என்ற விளக்கத்தை நமக்கு தருகிறார்.

சுவை மிகுந்த மோதகம்ஏந்திய கரத்தை தனக்காகவும் தந்தம் ஏந்திய கரம் தேவர்களை பாதுகாப்ப தற்காகவும் தீர்த்த கலசம் ஏந்திய கரம் அம்மையப்பனாகிய உமாமகேஸ்வரனை வழிபடுவதற்காகவும் பயன்படுத்து கிறார். இத்தகைய தெய்வ காரியங்க ளுக்கு ஒரு கையை மட்டுமே பயன்படுத் தும் கணபதி தன்னை வழிபடும்.பக்தர் களுக்காக அங்குசம் பாசமுடைய இருகைகளை யும் பயன்படுத்துகிறார் என்பது கச்சியப்ப முனிவரின் அழகிய கவிதை வாக்காகும்.

விநாயக பெருமானின் திருவிளையாடல் கள் ஆயிரக்கணக்கில் உண்டு என்று அவரை பற்றி புகழ்கின்ற புராணங்கள் பறையறிவிக்கின்றன குறிப்பாக கஜமுகா சூரனை வதைத்து முனிவர்களை காத்த விதத்தையும் திரிபுர சம்ஹாரத்தின் போது சிவ பெருமானின் ரத அச்சை ஒடித்த விதத்தையும் வியாச பகவான் சொல்ல சொல்ல மகாபாரதம் முழுவதையும் மேரு மலை சரிவுகளில் ஒற்றை கொம்பால் எழுதியதையும் வள்ளி திருமணத்தின் போது யானை வடிவாக வந்து முருக பெருமானுக்கு உதவி புரிந்ததையும் ஔவை பாட்டியாரின் பக்திக்கு மெச்சி அவரை ஒரே மூச்சில் கைலாசத்தில் கொண்டு சேர்த்ததையும் அகத் திய முனிவர் கமடலத்தை கவிழ்த்து காவேரி நீர் பெருக்கெடுக்க செய்ததையும் எவராலும் மறக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# பெயர் வைக்க உகந்த நாட்கள்

## ஜனவரி 2023

| | |
|---|---|
| 01.01.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 04.01.2023 | புதன்கிழமை |
| 08.01.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 13.01.2023 | வெள்ளிக்கிழமை |
| 18.01.2023 | புதன்கிழமை |
| 22.01.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 25.01.2023 | புதன்கிழமை |
| 30.01.2023 | திங்கட்கிழமை |

## பிப்ரவரி 2023

| | |
|---|---|
| 01.02.2023 | புதன்கிழமை |
| 05.02.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 09.02.2023 | வியாழக்கிழமை |
| 14.02.2023 | செவ்வாய்க்கிழமை |
| 17.02.2023 | வெள்ளிக்கிழமை |
| 19.02.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 22.02.2023 | புதன்கிழமை |
| 27.02.2023 | திங்கட்கிழமை |

## மார்ச் 2023

| | |
|---|---|
| 01.03.2023 | புதன்கிழமை |
| 03.03.2023 | வெள்ளிக்கிழமை |
| 09.03.2023 | வியாழக்கிழமை |
| 13.03.2023 | திங்கட்கிழமை |
| 17.03.2023 | வெள்ளிக்கிழமை |
| 19.03.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 22.03.2023 | புதன்கிழமை |
| 26.03.2023 | ஞாயிற்றுக்கிழமை |

## ஏப்ரல் 2023

| | |
|---|---|
| 01.04.2023 | சனிக்கிழமை |
| 05.04.2023 | புதன்கிழமை |
| 09.04.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 13.04.2023 | வியாழக்கிழமை |
| 18.04.2023 | செவ்வாய்க்கிழமை |
| 19.04.2023 | புதன்கிழமை |
| 23.04.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 28.04.2023 | வெள்ளிக்கிழமை |

## மே 2023

| | |
|---|---|
| 03.05.2023 | புதன்கிழமை |
| 07.05.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 10.05.2023 | புதன்கிழமை |
| 15.05.2023 | திங்கட்கிழமை |
| 17.05.2023 | புதன்கிழமை |
| 21.05.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 24.05.2023 | புதன்கிழமை |
| 30.05.2023 | செவ்வாய்க்கிழமை |
| 31.05.2023 | புதன்கிழமை |

## ஜூன் 2023

| | |
|---|---|
| 07.06.2023 | புதன்கிழமை |
| 11.06.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 14.06.2023 | புதன்கிழமை |
| 16.06.2023 | வெள்ளிக்கிழமை |
| 18.06.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 21.06.2023 | புதன்கிழமை |
| 26.06.2023 | திங்கட்கிழமை |
| 30.06.2023 | வெள்ளிக்கிழமை |





## ஜூலை 2023

| | |
|---|---|
| 05.07.2023 | புதன்கிழமை |
| 09.07.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 13.07.2023 | வியாழக்கிழமை |
| 18.07.2023 | செவ்வாய்க்கிழமை |
| 19.07.2023 | புதன்கிழமை |
| 23.07.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 28.07.2023 | வெள்ளிக்கிழமை |
| 31.07.2023 | திங்கட்கிழமை |

## ஆகஸ்ட் 2023

| | |
|---|---|
| 02.08.2023 | புதன்கிழமை |
| 05.08.2023 | சனிக்கிழமை |
| 06.08.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 10.08.2023 | வியாழக்கிழமை |
| 14.08.2023 | திங்கட்கிழமை |
| 20.08.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 24.08.2023 | வியாழக்கிழமை |
| 28.08.2023 | திங்கட்கிழமை |
| 30.08.2023 | புதன்கிழமை |

## செப்டம்பர் 2023

| | |
|---|---|
| 01.09.2023 | வெள்ளிக்கிழமை |
| 03.09.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 06.09.2023 | புதன்கிழமை |
| 10.09.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 17.09.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 20.09.2023 | புதன்கிழமை |
| 24.09.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 27.09.2023 | புதன்கிழமை |
| 29.09.2023 | வெள்ளிக்கிழமை |

## அக்டோபர் 2023

| | |
|---|---|
| 01.10.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 04.10.2023 | புதன்கிழமை |
| 08.10.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 13.10.2023 | வெள்ளிக்கிழமை |
| 18.10.2023 | புதன்கிழமை |
| 22.10.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 26.10.2023 | வியாழக்கிழமை |
| 31.10.2023 | செவ்வாய்க்கிழமை |

## நவம்பர் 2023

| | |
|---|---|
| 01.11.2023 | புதன்கிழமை |
| 05.11.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 09.11.2023 | வியாழக்கிழமை |
| 14.11.2023 | செவ்வாய்க்கிழமை |
| 18.11.2023 | சனிக்கிழமை |
| 19.11.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 22.11.2023 | புதன்கிழமை |
| 27.11.2023 | திங்கட்கிழமை |
| 29.11.2023 | புதன்கிழமை |

## டிசம்பர் 2023

| | |
|---|---|
| 01.12.2023 | வெள்ளிக்கிழமை |
| 07.12.2023 | வியாழக்கிழமை |
| 11.12.2023 | திங்கட்கிழமை |
| 15.12.2023 | வெள்ளிக்கிழமை |
| 17.12.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 20.12.2023 | புதன்கிழமை |
| 24.12.2023 | ஞாயிற்றுக்கிழமை |
| 29.12.2023 | வெள்ளிக்கிழமை |

# அண்ணன் சிவனை வழிபட்ட தங்கை மகாலட்சுமி

# திருமால் உடலில் விஷ முடிச்சுகள் நீக்கிய ஸ்தலம்



செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம்அடுத்த வாய லூர் பாலத்திற்கு அருகில் (இசிஆர் சாலை) அமைந் துள்ளது பரமேஸ்வர மங்கலம். சென்னையி லிருந்து வருகின்றவர்கள் கல்பாக்கம் அடுத்து அமைந் துள்ள பாலாற்றின் பாலம் முடிந்ததும் வருகின்றது வேப் பஞ்சேரி என்கின்ற ஊர். இங் கிருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் அமைந் துள்ளது இந்த ஊர். பரமேஸ்வரன் பெயராலேயே இயற்கை எழில் சூழ்ந்த அழகிய சிற்றூராக விளங்குகின்றது பரமேஸ்வர மங்கலம்.

புராண கதை:

ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

இந்த ஆலயம் பற்றி இரண்டுவிதமான கதைகள் சொல்லப் படுகின்றது.

நத்தம் பரமேஸ்வர மங்கலம் கோவிலில் உள்ள ஈசன் ‘சம்பகேஸ்வரர்’ எனப் போற்றப்படுகிறார். அம்பாளின் திரு நாமம் ‘சவுந்திர நாயகி.’ அசுரர்களும், தேவர்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வது வழக்கம். இதனால் இரண்டு பக்கமும் நிறைய இழப்புகள். தேவர்கள், தங்கள் பக்க இறப்புகளை சரிசெய்வது குறித்து பிரம்மனிடம் கேட்ட னர். அவர் திருப்பாற்கடலை கடைந்து அமிர்தம் எடுக்க வேண்டும் என்று கூறினார்.

ஆனால் திருப்பாற்கடலைக் கடைய நிறையபேர் வேண்





டும். தேவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தனர். அவர்கள் தங்களோடு, அசுரர்களை யும் இணைத்துக் கொள்ள முடிவு செய்தனர். அமிர்தத்தில் பங்கு தருவதாக கூறியதும் அசுரர் களும் ஒப்புக்கொண்டனர்.

மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு, தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தனர். இருபக்க மும் கடுமையாக இழுத்ததால் மலை சரிய ஆரம் பித்தது. அப்போது பாற்கடலைக் கடைந்து அமிர்தத் தை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த திருமால், கூர்ம (ஆமை) அவதாரம் எடுத்து, கடலுக்கடியில் சென்று மலையை தாங் கிப்பிடித்தார். இதை அடுத்து மீண்டும் பாற்கடலை அனைவரும் கடையத் தொடங்கினர்.

இந்த நிலையில் வாசுகி வலி தாளாமல்கடலில் நஞ்சை உமிழ்ந்தது. அதே நேரத்தில் கடலில் இருந்தும் விஷம் ஒன்று தோன்றியது. இரண்டு விஷமும் ஒன்றாக இணைந்து உலக உயிர் களை அழித்து விடும் சக்தி பெற்றவையாக இருந்தன. சிவபெருமான் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற் காக அந்த விஷத்தை சுந்தரர் மூலம் கொண்டு வரச் செய்து அருந்தினார். அந்த விஷத்தால் சிவனுக்கு ஏதும் ஆகி விடக் கூடாதே என்று பார்வதி தேவி அவருடைய கழுத்தைப் பிடிக்க, விஷம் ஈசனின் தொண்டையோடு நின்றது.

அதேசமயம் மலையின் கீழ் அதனைச் சரியாமல் ஆமை வடிவில் தாங்கி இருந்த மகாவிஷ்ணுவின் உடல் முழுவதும் நீலமாகிப் போனது. உடலில் விஷ முடிச்சுகள் தோன்றின. பாற்கடலில் இருந்து வெளிவந்த லட்சுமி இதைக்கண்டு பயந்து போனாள். அவள் திருக்கயிலாயம் சென்று கயி லாசநாதரிடம் முறையிட்டாள்.

சிவபெருமான், “லட்சுமிதேவியே... பூலோகத்தில் பாலாற்றின் தென்கரையில் உள்ள செண்பக வனம் சென்று அங்கு உறையும் சிவலிங்கத்தை வணங்கி தவம் இயற்று, அப்போது யாம் பார்வதி, பரமேஸ்வரனாய் காட்சி தந்து உந்தன் குறையை களைவோம்” எனக் கூறி அருளினார்.

அதன்படி லட்சுமிதேவி, குறிப்பிட்ட இடத்திற்கு வந்து, செண்பகமரத்தின் அடியில் சுயம்புவாய் எழுந்தருளி அருளும் சிவலிங்கத்தை, நறுமண மலர்களால் அர்ச்சித்து வழிபட்டாள். இவ்வாறு மகா லட்சுமி, ஈஸ்வரனை வழிபட்ட தலமே, ‘நத்தம் பரமேஸ்வர மங்கலம்.’ இங்குள்ள ஈசன் ‘சம்பகேஸ்வரர்’ எனப் போற்றப்படுகிறார். அம்பா ளின் திருநாமம் ‘சவுந்திர நாயகி.’ அன்னையின் திருக்கரங்களில் பாசம், அங்குசம் இல்லாமல் மகாலட்சுமியைப் போல தாமரையும் நீலோற்பலமும் ஏந்தியிருக்கிறாள்.

மகாலட்சுமி இங்கு ஈசனிடம் திருக்கயிலாய காட்சி அருளும்படி சொல்ல, உடனே பரமேஸ்வரன் அன்னை உமையவளுடன் அருகில் உள்ளக் குன்றில் கயிலாசநாதராய் காட்சிகொடுத்து மகா லட்சுமிக்காக கயிலாசநாதராய் சிறுகுன்றில் எழுந்தருளிய திருத்தலம், அருகில் உள்ளது. கனகாம்பிகை சமேத கயிலாசநாதர் திருக்கோவில் என்று அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் குன் றின் மீது ஈஸ்வரன் அருள்கிறார்.

மகாலட்சுமியின் வேண்டுதலால், திருமாலின் உடலில் இருந்த விஷ முடிச்சுகள் நீங்கின. அவ் வாறு திருமாலின் விஷ முடிச்சுகள் நீங்கியது ஒரு சிவராத்திரி தினமாகும். எனவே சிவராத்திரி விழா இத்தலத்தில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

புராண கதை–2

ஒரு முறை சிவபெருமான பூலோகத்தைக் கண்டுகளிக்க கைலாசம்விட்டு பூலோகம் வந்தார். தொண்டை மண்டலத்தில் உள்ள நந்தம் என்கின்ற ஊரில் குடிகொண்டார். ஒருநாள் பாலாற்றின் அருகே உலாவரும் போது பாலாற்றின் நடுவில் அமைந்துள்ள சிறு குன்றில் அமர்ந்தார். நதியும் இயற்கையும் சூழ்ந்த அழகில் மனம் மயங்கி மெய்மறந்து அங்கேயும் தவத்தில் ஆழ்ந்தார். பெருமாளின் தவத்தை காண விரைந்து வந்த வருணபகவான் மழை பெய்து அவ்விடத்தினை குளிர்வித்தான். மழையில் நனைந்தபடி தவம் செய்துகொண்டிருந்த இறைவனை கண்ட பசு ஒன்று அவர்மீது மழைதுளி படாதவாறு பால்

சொரிந்த வண்ணம் நின்றது. சிவனும் பசுவும் நனைவதை கண்ட ஐந்து தலை நாகம் ஒன்று படமெடுத்து குடைபோன்றுகாத்து நின்றது. (இந்த சிற்பம் ஆலயத்தில் கருவறையின்முன் அமைந்துள்ளது) தவத்திலிருந்து கண்விழித்த சிவபெருமான் இதனை கண்டு மனம் மகிழ்ந்தார்.

பால்சுரந்த பசுவிடமும் படமெடுத்து குடை பிடித்த ஐந்துதலை நாகத்திடமும் வேண்டும்வரம் என்ன என கேட்க, அவைகள் சிவபெருமான் இங்கேயே தங்கி வழிபடுவோருக்கு வேண்டும் வரம் அருள வேண்டும் என வேண்டின.அவற்றின் வேண்டுகோளை ஏற்று இறைவனும் லிங்க வடிவில் தங்கினார். கைலாயத்திலிருந்து வந்ததால் கைலாசநாதர் என்று அழைக்கப்படுகின்றார். கைலாசநாதர் உறையும் இடமாதலால் “ஸ்ரீகைலேஸ்வரம்” என்கின்ற பெயரும் இந்த ஆலயத்திற்கு உண்டு.

இந்த ஆலயத்தின் மகிமையை கேள்விப்பட்ட மன்னன் பரமேஸ்வர பல்லவன் ஏழாம் நூற்றாண்டின் கடைசியில் இந்த இடத்தில் ஆலயம் ஒன்றை கட்டினான். அவன் பெயராலும் இந்த ஊர் பரமேஸ்வர மங்கலம் என அழைக்கப்படுகின்றது. செப்பேட்டு கூரைகள் என்கின்ற புத்தகத்தில் செட்டித்தெருவின் நடுவில் இந்த சிவாலயம் அமைந்திருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிருதுங்க வர்ம; பல்லவன் மனைவி தேவசானி என்பவள் இங்குள்ள வினாயகருக்கு தனி ஆலயம் அமைத்து விளங்கேற்ற பொற்காசுகள் கொடுத்துள்ளதாகவும் கல்வெடடு தகவல் கூறுகின்றது. இங்கு அமைந்துள் வினாயகர் பிற ஆலயங்களில் இல்லாதவாறு திருவுருவில் அதிசய வடிவு சொண்டு திகழ்கின்றார். இங்குள்ள பாலாறு ஸ்ரீரநதி என்றும் அழைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீர என்றால் பால் என்று பொருளாகும்.

மகா சிவராத்திரி, மாதாந்திர சிவராத்திரி, பிரதோஷ நாட்கள், ஆயில்ய நட்சத்திரநாட்கள் மற்றும் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் ராகு காலங்களில் சுவாமிக்கு அபிஷேகம் மற்றும் வில்வத்தால் அர்ச்சித்து வழிபடுவதோடு, கருவறை தீபத்தில் நல்லெண்ணெய் சேர்த்து வணங்கினால், வாழ்வில் வரும் கொடிய துன்பங்களும் அடியோடு விலகும் என்பது ஐதீகம். விஷக்கடி பாதிப்பு உள்ளவர்கள் இத்தலத்தில் முறைப்படி வழிபட்டால் நலம் அடையலாம்.

இத்தல இறைவன் நினைத்த காரியங்கள் அனைத்தையும் எளிதில் கைகூட அருள்பவர். கனகாம்பிகை அம்மனை அர்ச்சனைசெய்துவழிபட வாழ்வில் எல்லா செல்வங்களும் வந்தடையும். திருமணம் வேண்டுபவர்கள் அம்பாளுக்குநெய் தீபம் ஏற்றுவார்கள். பங்குனி உத்திரதிருவிழா வில் இத்தலம் வந்து தரிசித்தால் திருமணதடைகள் விலகி சிற்பான இல்வாழ்க்கை துணை அமையும்.

சிவராத்திரி நாளில் இத்தல ஈசனை செண்பகப்பூ, கொன்றை பூ, வில்வம் ஆகியவற்றால் வழிபட்டால் வறுமை, தரித்திரம், உடல்உபாதைகள் அகன்று வாழ்வில் நலம், வளம் வந்தடையும். மகாலட்சுமி இத்தலத்தில் ஈசனை தரிசிக்கும் முன்பாக, இத்தல அம்பிகை சவுந்தர்ய நாயகியைதான் வழிபட்டாராம். எனவே இங்கு முதலில் அன்னை சவுந்தர்ய நாயகிக்கே பூஜைகள் நடைபெறுகிறது. அதன் பின்பே செண்பகரேஸ்வரருக்கு வழிபாடு நடக்கிறது.

ஆற்றின் கரையிலிருந்து ஆலயம் 150 அடி தூரத்தில் அமைந்துள்ளது. கரையிலிருந்து ஆலயம்செல்ல சிறு பாலம் அமைத்துள்ளார்கள். பாலம் முடிவில் வலது புறத்தில் எட்டு அடி உயரம் கொண்டபிரம்மண்டமான தட்சணாமூர்த்தி சிலை அமைந்துள்ளது. மீண்டும் சில படிகள் ஏறி மேலே சென்றால் வலதுபுறத்தில் வினாயகர் சிலைஅமைந்துள்ளது. அவரை வணங்கி சென்றால் நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளது. ஆலய வாயிலில் இடது புற சிம்ம வடிவில் தூணும் வலது புறத்தில் கல்வெட்டும் அமைந்துள்ளது. கருவறையில் ஸ்ரீகைலாசநாதர்









காட்சியளிக்கின்றார். கருவறையின் முன்பு இடதுபுறம் வினாயகர் சிலை அமைந்துள்ளது. வித்தியாசமான வினாயகராக வினாயகர் சிலை அமைந்துள்ளது.

புராண கதையில் வந்த வாறு வலது புறம் ஐந்துதலை நாகம் பசு அதன்கீழ்லிங்கம் என சிலைஅமைந்துள்ளது.ஈசன் கிழக்கு திசை பார்த்தவாறு நமக்கு அருள்பாலிக்கின்றார்.

தெற்கு திசை பார்த்தவாறு அம்மன் கோயில் அமைந்துள்ளது. ஐந்தடி உயரத்தில் அன்னை சவுந்தர நாயகி சிலை அமைந்துள்ளது. அம்மன் சன்னதி எதிரே வாசல் உள்ளது. அம்மன் திருக் கல்யாணம் நடைபெற தனியே பெரிய மண்டபம் ஆலயம் ஒட்டி அமைந்துள்ளது.

கோஷ்டாத்தில் முறையே வினாயகர், தட்ச ணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்கை சிலைகள் அமைந்துள்ளது. ஆலயம் சுற்றி வருகையில் முருகன் சன்னதி வள்ளி தெய்வானையுடன் காட்சியளிக்கின்றார்.

நவகிரக சன்னதி தனியே அமைந்துள்ளது. கோயில் சுற்றி வருகையில் ஒரு இடத்தில் 4 அடி விட்டத்தில சிறிய பள்ளம் உள்ளது. அதில் உள்ள பாறையில் முட்டி போட்ட சுவடுகள்அமைந்துள் ளது. அம்மன் முட்டி போட்டு வந்து இறைவனை வழிபட்டதாக சொல்கின்றார்கள்.. ஆலயத்தில் முருகர், வீரபத்திரர், பைரவர், சூரியன், சனி ஆகியோர் தனிச் சன்னிதிகளில் அருள்புரிகின் றனர். இத்தல பைரவருக்கு முழுமதி நாளில் வெற்றிலை மாலை சூட்டு வதும், ராகு காலம், அஷ்டமி நாட்களில் சிவப்பு மலர் மாலை சூட்டி வழிபடுவதும் பெரும் நற்பலன்களை அள்ளித் தரும் என்கிறார்கள்.

செண்பகரேஸ்வரர் அருளும் திருத்தலம் ‘நத்தம்’ என்றும், கயிலாசநாதர் அருளும் திருத்தலம் ‘பரமேஸ்வர மங்கலம்’ என்றும் அழைக்கப்படுகிறது.

இவ்விரண்டு திருத்தலங்களும் மிக அருகில் உள்ளதாலும்,இவ்விரு திருத்தலங்களின் வரலாறும் ஒன்றுடன் ஒன்று இணைந்து உள்ளதாலும் இவ்விரு திருத்தலங்களும் உள்ள தலத்தை ‘நத்தம் பரமேஸ்வரமங்கலம்’ என்று இணைத்தே அழைக்கிறார்கள். சிறப்பு பெற்ற இத்திருத்தலம் பாலாற்றின் கரையில் உள்ளது

அமாவாசை நாட்களில் செண்பகரேஸ்வரர் மற்றும் கயிலாசநாதர் திருக்கோவில்களில் மோட்ச தீபம் ஏற்றி வழிபடுவது நம் முன்னோர் களின் நற்கதிக்கு உதவும். இதனால் பித்ரு சாபங்கள், பித்ரு தோஷங்கள் அகன்று நம் வாழ்விலும், நம் சந்ததிகள் வாழ்விலும் வளம் பிறக்கும். பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள் காலத்தில் திருப்பணிகள் நடந்து உள்ளதை இத்தல கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. செண்பகரேஸ்வரர் ஆலயத்தின் உள்ளே தனிச் சன்னிதியில் சீதாதேவி, லட்சுமணன் சமேத ராமபிரான் எழுந்தருளியுள்ளார்.

ஆற்றில் தண்ணீர் நிறைய வரும் சமயம் ஆலயத்திற்கு செல்வது சிரமமாக இருந்துள்ளது. அதனை கருத்தில் கொண்டு சில வருடங்களுக்கு முன்னர் சென்னையை சேர்ந்த திரு.ரவிக்குமார் என்பவர் ஆலயம் செல்ல பாலம் அமைத்து கோயிலினையும் சீரமைத்துள்ளார்.



வேலன்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்:

காலை 8.00 மணி முதல் 10.30 மணிவரை. மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை. ஆலய தொடர்புக்கு: 6381469408/9442257642, ஆலய குருக்கள்: 9944273451

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# ஆன்மீக வழியில் அமைதி

58

ஒரு மனிதன் நான் ஜடமாக இருக்கிறேன் என்றால் அவன் அசையாத பொருள் எனக் கருதப்படுவான். ஜடம் பற்றி ஞானம் இருந்தால் மட்டும் ‘நான் ஜடமாக இருக்கிறேன்’ என்று ஒருவரால் கூற முடியும். அதாவது அவர் சித் ஸ்ரூபமாக இருந்தால் ஒழிய அவ்வாறு கூற முடியாது. ஒரு பொருள் பற்றி அதன் தன்மை பற்றி ஞானம் இருந்தால் ஒழிய அப்பொருளை எந்த ஒரு மனிதனாலும் அனுபவவிக்க முடியாது. ஒரு பொருளை அனுபவவிக்க வேண்டுமெனில் அந்தப் பொருளைப் பற்றி ஞானம் (அறிவு) சிறிதளவாவது இருக்க வேண்டும்.

எழுது பொருட்களான பேனா பென்சில் பற்றி அதன் பயன்பாடு என்ன என்ற அறிவு ஒருவருக்கு இருந்தால்தான் அதனை பயன்படுத்த முடியும். அதாவது அதனை பயன்படுத்தி எழுதுவதற்கு முடியும். எழுதத் தெரியாதவனிடம் பென்சில் கிடைத்தால் அதன் பயன்பாடு என்ன என்று தெரியாமல் அது ஒரு வேண்டாத அழகிய குச்சி என நினைத்து தூர வீசி விடுவான்.

நாம் இந்த உலகத்தில் இருந்துகொண்டு விழிப்புநிலையில் ஏதாவது ஒன்றைப்பற்றி அறிந்துகொண்டோ சிந்தித்துக்கொண்டுதான் இருக்கிறோம். அவ்வாறு அறிந்த ஏதோவொரு பொருளைப் பற்றி ஏதோவொரு வகையில் நமது இந்திரியங்கள் மூலம் அனுபவவித்துக்கொண்டுதான் இருக்கிறோம். நாம் உறங்கும்போது கனவு காண்கிறோம். கனவில்கூட உலகில் காணும் ஏதோவொரு பொருளை அனுபவவித்துக்கொண்டுதான் இருக்கிறோம். எடுத்துக்காட்டாக ஒருவர் காரில் செல்வதுபோல் கனவு கண்டால் அதன்மூலம் காரில் சொகுசாக செல்வதுபோல் ஏதோவொரு இன்பத்தை கனவு காண்பதன் மூலம் அவர் அனுபவவிக்கிறார்.

ஆழ்ந்த உறக்கத்தில் என்ன அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம் என்றால் அறியாமையையும் ஆனந்தத்தையும் அனுபவவித்துக்கொண்டு இருக்கிறோம். ஆழ்ந்த உறக்கத்தில் தன்னை மறந்து ஆனந்தமாக உறங்கினேன் என்று மகிழ்ச்சியாக விழித்து எழுந்தவுடன் கூறுகிறோம். ஆழ்ந்த உறக்கத்தில் நாம் ஆனந்தமாக இருக்கிறோம் என்பதை அறியாமல் நாம் அறியாமையையும் ஆனந்தத்தையும் அனுபவவிக்கிறோம்.

மனதில் தோன்றும் உலகத்தை அனுபவவிக்கிறோம். ஒரு பொருளை அனுபவவிக்க வேண்டுமெனில் அந்தப் பொருளைப் பற்றி ஞானம் (அறிவு) சிறிதளவாவது இருக்க வேண்டும். உலகத்தில் நாம் காணும் பொருட்கள் எல்லாம் நம் கண்களில் இருந்து மறைந்து விட்டால் நாம் அப்பொருளைப் பற்றி அறிய முடியுமா? அந்தப் பொருள் இருந்தால்தான் அதனை அறிய முடியும். அதேபோல் பொருள் இல்லையெனில் அறிபவனும் அங்கு இருக்க மாட்டான். பொருள் இருந்தால்தான் அதனைப் பற்றி அறிபவன் பார்க்க முடியும்.

அவ்வாறு மறைந்த பொருட்கள் அவன் காண முடியாவிட்டாலும் அப்பொருள் பற்றி அறிவு அவனிடம் இருக்கும். எனவே அவன் முன்னால் நிலையாக இருப்பது அவன் அறிவு



மட்டும் இருக்கும் என்பதை அறிந்த கொள்ளலாம். மறைந்த பொருட்கள் அவன் முன்னால் வந்து விட்டால் அறிபவனும் இயல்பாக அங்கு வந்து விடுவான். அவ்வாறு அறியப்படும் பொருள் அடிக்கடி வந்து போகலாம் அல்லது மறைந்து போகலாம். அதுபோல் பொருளைப்பற்றி அறிபவனும் வந்து போய்க் கொண்டிருப்பான். ஆனால் ஒன்றும் மட்டும் அதாவது அந்தப் பொருள் பற்றிய அறிவு அவனை விட்டு எப்போதும் மறந்து போகாமல் இருக்கும்.

ஒரு பொருளைப் பற்றி அறிபவனின் அறிவு மட்டும் நிலையாக இருக்கும். பொருள் மறைந்தாலும் அந்த அறிவு மட்டும் அவனிடம் இருந்துகொண்டே இருக்கும். பொருள் மறைந்தாலும் தோன்றினாலும் அந்தப் பொருள் பற்றிய அறிவு அவனிடம் மறையாமல் நிலையாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக நாம் ஒரு அழகிய ரோஜா மலர்க்கூட்டத்தைப் பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். நாம் வீட்டுக்கு வந்தபிறகும் அந்த ரோஜா மலர் கூட்டத்தைப் பற்றி நினைக்கும்போது ரோஜா மலர் பற்றிய அறிவு நமது மனதில் அறிவுறுத்தி மலர்களை மனக்கண்ணில் தோன்றும்படி செய்யும்.

அதாவது ஒரு பொருளைப் பற்றிய அறிவு அறிபவனிடம் நிலையாக இருக்கும். அந்தப் பொருள் தோன்றினாலும் மறைந்தாலும் அந்தப் பொருள் பற்றிய அறிவு நிலையாக அவனிடம் இருக்கும். எனவே அந்தப் பொருள் அவன் முன்னால் தோன்றும்போது அறிபவன் தன்னோட அறிவின் துணைகொண்டு அப்பொருள் பற்றி அறிந்து கொள்வான். ஒருவனுடைய அறிவு உலகில் காணும் ஒரு பொருளைப் பார்த்தவுடன் அவன் அறிபவனாக மாறி விடுகிறான். அந்த அறிவைத்தான் சித் ஸ்ரூபம் என்று சாஸ்திரம் கூறுகிறது. ஒரு பொருளைப்பற்றி அறிந்து கொள்வதற்கு எந்த ஒன்று உதவுகிறதோ அது சித் ஸ்ரூபம் அல்லது ஞானம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

அறியும் பொருள் மறைந்து விட்டால் அங்கு அறிபவனும் மறைந்து விடுகிறான் அறியும் பொருள் வந்து விட்டால் அறிபவனும் வந்து விடுகிறான். அதாவது பொருள் மறைந்தால் அறிபவனும் மறைந்து விடுகிறான். பொருள் வந்து விட்டால் அறிபவனும் வந்து விடுகிறான் ஆனால் அறிபவனும் அறியப்படும் பொருளும் சென்று விட்டாலும் ஒன்று மற்றும் நம்மை விட்டு அகலுவதில்லை. அது நமது



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அறிவு அல்லது ஞாபக சக்தி ஆகும். அறியப்படும் பொருள் நினைவுக்கு வந்து விட்டால் அந்த அறிவு அறிபவனாக மாறி விடுகிறது. அறியப்படும் பொருள் மறைந்து விட்டால் அங்கு அறிபவனும் மறைந்து விடுகிறான். ஆனால் அவன் அறிவு மட்டும் நிலைத்து நிற்கிறது. நிலையாக இருக்கிறது. அறிவுதான் ஆத்மா சித் ஸ்ரூபம் ஆகும்.

ஆன்மீகத்தில் குரு சிஷ்யன் என்று கூறுகிறோம். குருவாக இருப்பவர் தன்னை நான் குரு என்று கூறும்போது அவர் முன்னால் சிஷ்யர்கள் இருப்பார்கள். அந்த சிஷ்யர்கள் அந்த இடத்தை விட்டு சென்று விட்டால் அவரை குரு என்று அப்போது யாரும் அழைப்பதில்லை ஏனென்றால் சிஷ்யர்கள் இருக்கும்வரைதான் அவர் குரு என்று அழைக்கப்படுகிறார். அவர் சிஷ்யர்கள் இல்லையென்றால் அவர் சாதாரண மனிதாராக அங்கு இருப்பார்.

போர்க்களத்தில் கிருஷ்ண பகவான் பகவத்கீதை உபதேசம் செய்யும்போது அர்ச்சுனனுக்கு குருவாக இருக்கிறார். அதற்கு முன் அவர் பகவானாக இருந்தார். அர்ச்சுனன் சிஷ்யனாக இருக்கும்போது பகவான் கிருஷ்ணன் குரு என்ற தன்மைக்கு மாறி விடுகிறார். பாரதப்போர் முடிவுக்கு வந்து கிருஷ்ணன் அர்ச்சுனன் தோள் மீது கையைப் போட்டு நடந்து செல்லும்போது கிருஷ்ணன் நண்பன் என்ற நிலைக்கு வந்து விடுக்கிறார்.

அறிபவனிடம் இருக்கும் அறிவு ஞானம் சித் ஞான ஸ்ரூபம் என்று கூறப்படுகிறது. எந்த ஒன்றினால் அறிபவன் என்று கருதப்படுகிறானோ அந்த ஒன்று சித் ஸ்ரூபம் அல்லது ஞான ஸ்ரூபம் என்று அழைக்கப்படுகிறது. அறிபவனுக்கு ஆதாரமாக இருப்பது அறிவு ஆகும்.

அறிவு என்பது நிலையாக இருக்குமா அல்லது அழிந்து விடுமா என்று சிந்தித்துப் பார்த்தால், நமது எந்த அறிவு அழிவில்லாமல் நிலையாக இருக்குமோ அந்த அறிவுதான் நித்தியம் என்று சாஸ்திரம் கூறுகிறது. சத் சித் ஞான ஸ்ரூபம் அழிவதில்லை. அநித்தியம் என்றால் குறிப்பிட்டக் காலம் வரை அழியாமல் இருப்பது ஆகும். குறிப்பிட்டக் காலம் இருந்து அதன் பிறகு அழிவது அநித்தியம் என்று கூறப்படுகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

# ருத்ராட்சத்தை பராமரிக்கும் முறைகள்!

ருத்ராட்சத்தில் இயற்கையாகவே மின்காந்த சக்தி உள்ளது. அந்த சக்தி முழுவதும் நமக்கு கிடைக்க வேண்டும், அதனால் ருத்ராட்சத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

1. ருத்ராட்சத்தில் உள்ள கோடுகளை விபூதி சந்தனம் வைத்து மறைக்கக் கூடாது.
2. மாதம் ஒரு முறை ஆலிவ் ஆயில், கடுகு எண்ணெய் அல்லது பசும் பாலில் 24 மணி நேரம் ஊற வைத்து, புதிய பிரஷ் கொண்டு தேய்த்து எடுத்து, தூய்மையான நீரில் கழுவி, துடைக்க வேண்டும்.
3. சோப்பை பயன்படுத்தக் கூடாது. ருத்ராட்சத்தை பாது காப்பாக வைக்க வேண்டும் எனில்சாணத்தில் தயாரித்த விபூதிக்குள் வைக்கலாம். ருத்ராட்ச மாலையை சுத்தப்படுத்தும் பொழுது இதற்கான கீழ்க் கண்ட மந்திரத்தை 9 முறை கூறவும்.
4. ருத்ராட்ச மாலையை கையில் வைத்துக் கொண்டு பயபக்தி யுடன்மந்திரம் கூறவும்.
   ஓம் ஐயும் கிலியும்
   சௌவும் ஸ்ரீயும்
   ஹரிம்ஓம் நமசிவாய
   ஓம் சிவநேத்ராய
   ருத்ராட்சாய நம
5. ருத்ராட்ச மாலையை பெற்றோரிடம் அல்லது அதிகம்மதிப்பவரிடம் கொடுத்து வாங்கி, பின் அணிந்து கொள்ளவும். அவர்கள் காலில்விழுந்து ஆசி பெற்றபின் வாங்கவேண்டும்.
6. சிவன் கோவிலில் வைத்து அணிவது மிகவும் சிறப்பு. ருத்ராட்ச மாலையை காரண மில்லாமல் கழட்டக் கூடாது.



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இணையதளம் வெளியிடும்

# பழனி முருகன் கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர்

● பாதயாத்திரை தொடங்கிய முதல் முருகன் ஸ்தலம்
● முழங்கால் வழிபோக்கும் முருகன் கோவில்,
● 12 ராசிகளுக்கான முருகன் கோவில்
● அறுபடைமுருகன் தலசிறப்பு, ● கங்கை தீர்த்தம் வழங்கும் கோவில் மற்றும் பலநூறு ஆன்மிக தகவல்கள் அடங்கிய பொக்கிஷமாக ஆர்ட் பேப்பரில்

**பல அரிய தகவல்களுடன் வெளியாகியுள்ளது.**



இதழ் தேவைப்படும் ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெறவும் தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

Ph:9994323622 W.No:9444228203

# பிரம்மன் தவமிருந்து வழிபட்ட

# அயனீஸ்வரம்





ஆலகால விஷமுண்டு அகிலத்தார்க்கு அரும் பொருளாய் திகழும் ஈசனின் அருட்தலங்கள் இம்மண்ணில் எண்ணற்றவை. "நன்னீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று சேக்கிழார் போற்றிய தொண்டை வளநாட் டில் பலர் அறிந்திடாத சிவத்தலங்கள் பல உண்டு. அவற்றுள்...காஞ்சிக்கு தெற்கிலும், சுகநதி என்னும் சிறு நதியின் வடகரையிலும் அமையப்பெற்றுள்ளது அயனீஸ்வரம் என்னும் வழூர். இப்பதி சோழர் காலத்தில்... "புலியூர்க் கோட்டத்து, இரும்பேடு கூற்றத்து வழுதாவூர்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்ணாமலையில் தீப்பிழம்பாய் நின்ற சிவபெருமானின் முடியைக் கண்டதாகபொய் யுரைத்ததன் [வழு] தவறு நீங்கிட பிரம் மன், தவமியற்றி, வழிபட்ட எண்ணற்ற தலங்களுள் இதுவும் ஒன்றாகும். பிரம்மன் வழிபட்டமையால் இப்பதி அயனீஸ்வரம் என்று அழைக் கப்பட்டுள்ளது.

ஆதியில் சோழர் காலத்தில் எழுப்பப்பட்ட இந்த அயனீஸ்வரம் என்னும் சிவாலயம், பின்னர் மூன்றாம் குலோத்துங்கன் ஆணைக்கிணங்க செம்பியத்தரையன் என்ற சம்புவராய மன்னனால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கு தானமாக கோவில்குப்பம், சாத்தனூர் ஆகிய கிராமங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

மேலும், மாகரல் நாட்டு ஆர்ப்பாக்கம் கிராமத் தின் வருவாயையும், புரவாநல்லூர் என்கிற கிராமத்தின் வருவாயையும் இந்த அயனீஸ்வரர் ஆலயத்திற்கு வழங்கப்பெற்றுள்ளன. அதோடு, இருபத்திமூன்று பசு மற்றும் காளைகளையும் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

இத்தலத்தின் முக்கிய தீர்த்தமான சுகநதி, சுகமகரிஷி தவம்புரிந்த நெடுங்குன்றம் என்னும் ஊரின்பால் உள்ள கிளி மலை என்னும் சுகப் பிரம்ம ரிஷி பர்வதத்திலிருந்து உற்பத்தியாகி, படாளம் வழியாக பாலாற்றில் கலக்கிறது.

திருவண்ணாமலையில் இருந்து அருள்நெறி பரப்பிய, இரமண மகரிஷி என்னும் முத்தைக் கண்டெடுத்த இறைஞானி சேஷாத்ரி சுவாமிகள்



இவ்வூரில் 21.01.1870–ஆம் ஆண்டு வரதராஜன், மரகதாம்பாள் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு தவத்திரு பசுமலை சுவாமிகள் இங்கு வருகை தந்து, தங்கியிருந்து, திருப்பணிகள் செய்து வழிபட்டுள்ளார்.

ஊரின் வடபால் சாலையை ஒட்டி தோரண வாயிலுடன் நாற்புறமும் உயரிய மதில்களோடு பிரம்மாண்டமாக திகழ்கிறது ஸ்ரீ காமரசவல்லி உடனுறை ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் திருக்கோவில்.

உள்ளே சென்றதும், முதலில் முழுமுதற்க் கடவுளான விநாயகரின் தனிச்சன்னதி தெற்கு பார்த்தபடி அமைந்துள்ளது. நடுநாயகமாக உட்பிரகாரத்துடன் கூடிய ஈசனது சன்னதி அமையப் பெற்றுள்ளன. ஆலய தென்கிழக்கு திசையான அக்னி மூலையில் பிரம்மதீர்த்தம் நான்கு புறமும் படித்து சூழ அளவில் பெரிதாகக் காட்சியளிக்கின்றது.

கிழக்கே கொடிமரம் மற்றும் நந்தியம்பெருமானை தரிசிக்கலாம். நேராக தூண்களுடனான மகாமண்டபம் இறைவன் சந்நிதியையும், இறைவியின் சந்நிதியையும் இணைகின்றது.

இம்மண்டபத் தூண்களில் பதினாறு கணபதியின் திருவுருவங்கள் புடைக்கப்பட்டிருப்பது சிறப்பு. மகாமண்டபத்தின் இடப் புறமாக தென்திசை பார்த்து அம்பிகையின் தனிச்சந்நிதி அமைந்துள்ளது.

அம்பிகையாக ஸ்ரீ காமரசவல்லி தாமரை மற்றும் நீலோத்பல மலர்களை ஏந்தி கருணைரசம் சிந்துகின்றாள். தெவிட்டாத அழகு. ஆவுடை மீது நின்றபடி காட்சி தரும் இவ்வன்னையை நாளெல்லாம் பார்த்தவண்ணம்இருக்கலாம். பக்தர்கள்விரும்பி வேண்டுவதை வரமாகத் (காம=விருப்பம்) தருவதால் அன்னைஇங்கு காமரச வல்லி என புகழப் படுகின்றாள்.



மோ.கணேஷ்

ஒரு சுற்றுடன் தனி விமானத்தோடு கூடியது இங்கு அம்பிகையின் சந்நிதி.

அற்புதமான அம்மை யின் தரிசனம் கண்டு பின், அப்பனை தரிசித்து செல்கிறோம். முறையான சிவ கோஷ்ட மூர்த்தங்களோடு கூடியது சிவன் சந்நிதி. எழில்மிகு துவாரபாலகர்கள். அருகே ஐராவத கணபதி வீற்றிருக்கின்றார். கந்தன் இங்கு வாயு மூலையில் வள்ளி மற்றும் தெய்வானையுடன் வாசம் செய்கின்றார். அமைதியான ஆலயம் மனம் லயிக்கின்றது.

வருடத்தில் ஆடி கிருத்திகையில் முருகருக்கு திருக்கல்யாண உற்சவமும், திருவீதியுலாவும் நடக்கிறது. சித்ரா பௌர்ணமியில் ஏகதின உற்சவமும், பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் உண்டு. விநாயகர் சதுர்த்தி வெகு விசேடமாக அனுசரிக்கப்படுகிறது. திருவீதி உலாவும் நடக்கின்றது. ஏனைய சிவாலய விசேடங்களும் இங்கு சிறப்புற நடத்தப்படுகின்றன.

அரசுக்குச் சொந்தமான இவ்வாலயத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தல விருக்ஷமாக சரக்கொன்றை திகழ்கிறது. சோழர் கால கல்வெட்டுகள் ஆலயமெங்கும் நிறைந்து காணப்படுகின்றன.

இங்கு அன்னை காமரசவல்லியைத் திருமண வரம் வேண்டி பிரார்த்தனை செய்து, பலனடைந்தோர் பலர். ஆலயம் தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் திறந்திருக்கும். இவ்வூரில் ஸ்ரீ முத்துநாயகி அம்மனும், ஸ்ரீதேவி பூதேவி சமேத திருமால் ஆலயமும் பிரசித்தம். மகான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அவதரித்த இந்த வழூர் திருதலத்தைக் கண்டு, வாழ்வில் வளங்கள் பல பெறுவோம்.

வந்தவாசியில் இருந்து மேல் மருவத்தூர் செல்லும் சாலையில் மருதாடு என்கிற ஊரை அடைந்தால், அங்கிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது வழூர்.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்:
9789156179

# பழனி தைபூச பாதயாத்திரிகளுக்கான
# 13ம் ஆண்டு 'பழநி முருகன் அன்னதான குடில்' சேவை

தைப்பூசத்திற்கு விரதம் இருந்து பாதயாத்திரையாக செல்லும் பக்தர்களுக்காக, ஒட்டன்சத்திரம் அருகே குழந்தைவேலப்பர் சன்னதி அருகே "நியூ ரி.ஜி. மஹால்" என்ற திருமண மண்டபத்தில் பழநி முருகன் அன்னதான குடில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குடில், தமிழக முழுவதும் உள்ள முருக பக்தர்களால் ஒன்றிணைந்து நடத்தப்படுகிறது.

வரும் பிப். 1ம் தேதி மாலை 5 மணிக்கு துவங்கி, பிப்.2 மாலை வரை நடக்கிறது.

மாலை காப்பி, இரவு சிற்றுண்டி ,அதிகாலை காப்பி, காலை சிற்றுண்டி,

மதியம் தலைவாழை இலையில் சாப்பாடு மற்றும் 5 ஆயிரம் துணி பைகளில் பழங்கள் பிஸ்கட் வழங்கப்படுகிறது.

இந்த குடிலை 13வது ஆண்டாக நடத்துகின்றனர்.

குத்துவிளக்கு ஏற்றி அன்னதானத்தை துவக்கி வைக்கும் வாய்ப்பு, அதிக ஆண்டுகளாக பாதயாத்திரை வரும் பக்தர்களை தேர்ந்தெடுத்து அளிக்கப்படுகிறது.

மேலும் மருத்துவ முகாமும் நடத்தப்படுகிறது. பாதயாத்திரை பக்தர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் அளிக்கப்படுவதுடன் மருந்துகளும் அளிக்கப்படுகிறது.

பழநி பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணமுடைய பக்தர்களை ஒன்றிணைத்து பெரியளவில் அன்னதானத்தை ஆண்டுதோறும் தொடர வேண்டும் என்பதே இந்த குடிலின் தாரக மந்திரம்.

www.aanmeegamalar.com



இந்த குடிலில் நேரடியாக சேவையாற்ற விரும்புபவர்கள், வெளியூர்களில் இருந்தாலும் நிதியுதவி, பொருளுதவி தர விரும்புபவர்கள் 9944309719/ 9842198889 எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# ஒரு மதவாதிக்கு எது மேல் எது கீழ் என்பது தேவையில்லை

உண்மையில் தத்துவநூல்களில் உதவி என்ன? சில சிந்தனையாளர்கள் கருத்தாக சொல்வதெல்லாம் இந்நூல்களெல்லாம் பிரமிக்கும்படியான பல வார்த்தைகளைக் கொண்ட நூல்களே என்கிறார்கள். பிரமிக்கத்தக்க உதாரணங்களும், அழகான வார்த்தைக் கோர்வைகளும் உடனே எடுத்துக் கொள்ள கூடிய உபயோகமான உதாரணக் கவிதைகளாகவும் இவைகள் இருக்கின்றன. இதுபோன்ற கவிதைகள் சாதாரணக் கவிதைக் கோர்வையிலும் இலக்கியத்திலும் இருந்து கொண்டு மக்களுக்கு உதவி செய்கின்றன. வேறு ஒரு நிலையில் பார்த்தால் கடவுளைப் பற்றிக் கூறாத இலக்கியங்களும் கவிதைகளும் இயற்கைதான் கடவுள் என்று நெறிப்படுத்தி வலியுறுத் தியதும் இல்லை. இதனிடையில் தத்துவ நூல்கள் ஒன்றே தனிமையாய் கடவுளை எடுத்துச் சொல்லுகிறது விளக்குகிறது. இந்தவகையில் இது தனியானதே வேறானதே.

❖ ❖ ❖

உலகில் இன்றுவரை சில மதங்கள் நிலவி வருகின்றன. புத்தமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம், இந்துமதம் போன்றவை களும் பிறமதங்களும் சிறப்பானவைகளே. இவையனைத்தும் மனிதர்களுக்கு உபயோகமாக இருக்கிறது. இதில் எந்த மதம் சிறந்தது? எது வரிசைக் கிரமத்தில் முதலிடத்தைப் பிடிக்கிறது? நீங்களோ அல்லது வேறு எவரேனுமோ இம்மதங்களை வரிசைப்படுத்தி சொல்லுவார்களா?

❖ ❖ ❖

மேற்கண்ட மதங்களை ஆராய்ந்து படித்து துருவி வரும் பொழுது முறைப்படுத்துகின்ற இம்முறை சிந்தனை நியாயமானதாக இருக்கும்.



சாதாரண உலகிற்கும் கல்வி உலகிற்கும் இது தேவை. ஒரு மதவாதிக்கு எது மேல் கீழ் என்பது தேவையில்லை. ஒவ்வொரு மதமும் தனக்கென்று ஒரு பாதையையும் உண்மையை உணரும் வழியையும் தனித்தனியாக வைத்துக் கொண்டிருக்கின்றன.

❖ ❖ ❖

இந்துமதம் உட்பட உலகமதங்களுடன் புத்தமதம் எப்படி முழுமையாக வேறுபடுகிறது? முதலில் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள் என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு புத்தமதம் சிந்திக் கப்படவில்லை. தோற்றுவிக்கப்படவும் இல்லை. அது முழுக்க முழுக்க மனிதனின் சிந்தனையை அடிப்படையாக கொண்டது. புத் என்ற காரணப்பெயர் அதற்கு இதனால் ஏற்பட்டது. ஆச்சரியப்படக்கூடிய பல மதங்களுக்கு மத்தியில் இதுவே புத்த மதத்தின் வேறுபாடு.

❖ ❖ ❖

'தாங்கள் புத்தனின் ஆதரவாளரா? அல்லது புத்தமதத்தின் ஆதரவாளரா? இன்று நீங்கள் ஒரு இந்துதானே அதனால் நேர்மையாக விளக்குங்கள்'? என்கின்றனர். நான் இப்பெரிய உலகில் என்னைப் பற்றி சொல்லி கொள்ளும்போது ஆணவமில்லாத நான் ஒரு எளிமையான இந்து. புத்தி மதங்களுக்கெல்லாம் அவசியமானது. அதனால் எவராலும் புத்தியையும் அதனுடைய சிந்தனை ஆட்சியையும் மறுக்க முடிவ தில்லை. எவ்வாதத்தையும் சொல்லி புத்தியை முற்றிலும் மறுத்தால் தான் புத்தமதத்தை மறுக்க முடியும். சிந்தனைக்குள் இது ஒரு விவகாரம்.

❖ ❖ ❖




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


புத்திக்குள் விவகாரம் என்று தாங்கள் எதைக் கருதி சொல்லுகிறீர்கள்? எதைக் கருதுகிறீர்கள்? ஒரு எழுத்திலோ பேச்சிலோ உவமான உவமேயங்களைக் காட்டி பெரிய கருத்தை விளக்கும்பொழுது பல சிறப்பான சொற்களை சொல்ல வேண்டி வரும். உடனே அந்த சொல்லை மட்டும் எடுத்துக்கொண்டு புத்தா என்று சொன்னதனால் நீங்கள் புத்திக்கு மட்டும் உடையவர் என்று சொல்லாதீர்கள். அனைவரும் புத்திக்கு உடையவர்களே. சொல்லை வைத்து மதத்தின் முத்திரையை என் மீது குத்தக்கூடாது. தயவுசெய்து புத்தரையும் புத்தமதத்தையும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். எனது பழக்கம் இப்படிப்பட்டதே.

❖ ❖ ❖

மொழி என்றால் என்ன? மொழி என்றால் சொல் என்று பொருள். அதையே ஒரு கட்டளையாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் மொழி என்பது ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் மத்தியிலே ஏற்படுகின்ற ஒரு நல்லெண்ண தொடர்பு ஆகும். இத்தகைய தன்மை உள்ள முறைகள் முறையுடன் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். இதில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு காலத்திலும் பல்வேறு விதமான வளர்ச்சிகளும் உயரங்களும் உள்ளன. இதுவே என்னுடைய மொழிக்கொள்கை.

❖ ❖ ❖

இந்தியாவில் பல்வேறுவிதமான பல ஒலிகளை எழுப்புகின்ற மொழிகள் இருக்கின்றன. நீங்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? ஒவ்வொன்றையும் எப்படி முறைப்படுத்துகின்றீர்கள்? ஒவ்வொரு மொழியைப் பற்றியும் தங்களுடைய சிறப்பான கருத்து என்ன? முக்கியமாக பல்வேறு மொழிகளை ஒன்றாக வைத்து ஆராய்ந்து பற்பல சிறப்பு அபிப்ராய பேதங்கள் தோன்றி இருந்து கொண்டு இருக்கின்றனவே. அது அப்படித்தானா? இதை விளக்குங்கள். மேலும் நல்ல தெளிவு பெற்ற கவிஞர்கள் மொழி பற்றி தோன்றி உள்ள அபிப்ராய பேதங்களுக்கு முடிவு விரும்புகிறார்கள். இதற்கு தங்களுடைய முடிவு என்ன? பதில் சொல்லவும். இது போன்ற சிந்தனைக்குரிய கேள்வி. உன்னைப் போன்று நான் எல்லாவற்றையும் அறிவேன். இருந்தாலும் தெளிவு என்பது உண்மை கண்ணுக்கு தெரிவதைப் போன்று தெரிய வேண்டும். பதட்டப்படாதீர்கள். உங்களுடைய கவலைக்கு விளக்கம் அளிக்கிறேன். இதை நன்கு படியுங்கள்.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்













# ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் ஸ்ரீ உத்தண்ட சௌந்தரராஜப் பெருமாள் ஆலயத்தில் வஜ்ராங்கி சேவை

தமிழ்நாட்டிலுள்ள தேனி மாவட்டம்,பெரியகுளம் தாலுக்காவில், வைகை அணைக்கு நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் சமேத ஸ்ரீ உத்தண்ட சௌந்தரராஜப் பெருமாள் ஆலயத்தில், பல நூறு ஆண்டுகளாக தை மாதம் முதல் நாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடை பெறும் வஜ்ராங்கி சேவை அந்த வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற உற்சவமாகும் .

இந்த ஆலயத்தில் கருவறையில் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேதராக எழுந்தருளியுள்ளார். ஸ்ரீ சௌந்தரவல்லித் தாயார் தனி சன்னதியில் எழுந்தருளியுள்ளார். தனியாக ஆஞ்சநேயர் சந்நிதியும் உண்டு.

துவஜஸ்தம்பத்தின் அருகே உயரமான அரி வாள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆலய மதில் சுவரில் ஒரு ஜன்னல் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் உள்ளிருந்து பார்த்தால் , தொலை வில் உள்ள கருப்பணசாமி ஆலயம் தெரியும். கருப்பணசாமிக்கு செய்யப்பட வேண்டியபூஜை, இந்த அரிவாளை செய்யப்பட்டு, இங்கி ருந்தே கற்பூர தீப வழிபாடு செய்யப்படும். ஆலயத் திற்குள் பூஞ்செடிகளும் , பசுமையான மரங்களும் உள்ளன.

தஞ்சை மன்னராக இருந்த ஸ்ரீ சரபோஜி மஹாராஜா அவர்கள் ஒரு சமயம் கடும் வயிற்றுவலியால் அவதியுற்றபோது , பல்வேறு சிகிச்சைகளும் பலனளிக்காத நிலையில் , ஸ்ரீ உத்தண்ட சௌந்தரராஜப்பெருமாள் அவரது கனவில் தோன்றி, இந்த ஆலயத்தில் எழுந் தருளியுள்ள தனக்கு வஜ்ராங்கி செய்து சமர்ப் பித்தால் அந்த தீராத வயிற்றுவலி தீரும் என்று கூறியதாகவும், அவ்வாறே அவர் செய்து கொடுத்து, தை முதல் நாளில் அதை பெரு மாளுக்கு சார்த்தி உற்சவம் நடத்தியதாக வும், அதன் பின்னர் அவரது வயிற்றுவலி குணமான தாகவும் வரலாறு கூறுகிறது.

இந்த வஜ்ராங்கி ஆபரணங்கள் ஆலய அறங்காவலர் பொறுப்பில் வைக்கப்பட்டு , கூடு தல் பொறுப்பாளராக அவ்வூரில் கிராம முனிசீப் ஆக இருந்த வக்கீல் திரு உத்தண்ட ராமசாமி அவர்கள் நியமிக்கப் பட்டிருந்தார்.

இந்த வஜ்ராங்கி சேவையன்று, உற்சவப் பெருமாள் திரு உத்தண்ட ராமசாமி அவர்கள் தலைமையில் ஊர் மக்களால் பல்லக்கில் ஊர்வல மாக எடுத்துச் செல்லப்பட்டு , வைகையாற்றில் வைத்து அபிஷேகம் செய்யப்பட்டு, ஆலயத்திற்கு எடுத்துவந்து, அலங்காரம் செய்வார்கள்.

ஆண்டுதோறும் திரு உத்தண்ட ராமசாமி அய்யரும், அறநிலையத்துறை நிர்வாக இயக்கு நரும் இணைந்து ஊர் மக்கள் முன்னிலையில் அந்த ஆபரணங்களை எடுத்து பெருமாளுக்கு அணிவிப்பார்கள்.

இந்த உற்சவத்தின்பொழுது கருவறைக்கு எதிரே உள்ள மண்டபத்தில் ஆயிரம் சீப்பு வாழைப்பழங்கள் கொண்டு பந்தல் அமைத்து, உற்சவரை அதில் அமரவைத்து, பூஜைகள், ஆராதனைகள் முடிந்ததும், சர்க்கரைப்பொங்கல், புளியோதரை , சுண்டல் நைவேத்தியம் செய்யப் பட்டு வந்திருக்கும் ஆயிரக்கணக்கான பக்தர் களுக்கு அந்த வாழைப்பழத்துடன் பிரசாதமாக விநியோகம் செய்யப்படும்.

இதே நாளில், அந்த கிராம தேவதையாகக் கருதப்படும்ஸ்ரீ செல் லாண்டியம்மன் கோவிலி லும், ஊர்க்கோடியில், வைகையாற்றின் கால்வாய்க் கரையில் எழுந் தருளியுள்ள பெருமாளின் சகோதரி யாகக்கருதப்படும் ஸ்ரீ மதுரகாளியம் மனுக்கும் , ஊர்காவல் தெய்வமாக கருதப்படும் ஸ்ரீ சங்கிலி கருப்பசாமி கோவிலிலும், சிறப்பு பூஜைகள், அபிஷேக அலங்காரங்கள், பொங்கல் படையல்கள் சமர்ப்பிக்கப்பட்டு, கோவிலுக்கு வரும் அனைவருக்கும் அன்ன தானம் வழங்கப் படும்.


எஸ்.வெங்கடேசன்

இந்த உற்சவம், திரு உத்தண்ட ராமசாமி அய்யருக்குப் பின் அவரது மூத்த மகள் திருமதி உத்தண்ட லக்ஷ்மி அம்மாள் அவர்களின் கணவர் மதுரை மேலக்கால் கிராம பஞ்சாயத்துத் தலைவராகஇருந்த திரு வெங்கடநாகரத்தினம் அய்யர் மற்றும் அவரது வாரிசுகள் முன்னி லையில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அந்த ஊர் வாழ்மக்கள், இந்த தெய்வங்களின் பெயர்களை முன்னிறுத்தி , உத்தண்டம், சௌந்தரம், மதுரம், செல்லி, செல்லாயி செல்லன் என்று தங்கள் குழந்தைகளுக்கு வைப்பது வழக்கம். இந்த ஆலயம் குள்ளப்புரம் கிராம பேருந்து நிலையத்திற்கருகிலேயே அமைந்துள்ளது. அங்கு செல்ல பெரியகுளம் மற்றும் ஆண் டிப்பட்டியிலிருந்து பேருந்து வசதியும், பெரியகுளத் திலிருந்து தனி ஆட்டோ மற்றும் ஷேர் ஆட்டோ வசதியும் உள்ளது.

குள்ளப்புரம் கிராமத்திலிருந்து சுமார் ஏழு கிலோமீட்டர் தொலைவில் வத்தலக்குண்டு பெரியகுளம் சாலையில் அமைந் துள்ள தேவ தானப்பட்டிமூங்கிலணை காமாட்சியம்மன் கோயில் தனிச் சிறப்பு பெற்றது. இக்கோவிலில் சிலைகளோ, உற்சவ விக்கிரகமோ இல்லை. கோவிலுக்குமுன்உள்ள கதவுக்குத்தான்பூசை நடைபெறு கிறது. அம்மனுக்கு அன்னநைவேத் தியம் இல்லை. உடைக்காத தேங்காயும், உரிக்காத வாழைப் பழமும்தான் படைக்கப்படுகிறது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370








பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# அலைபாயும் மனக்குதிரையை கட்டுப்படுத்தலாமா? ஏமாற்றலாமா?

எந்த ஒரு செயலையும் செவ்வனே செய்ய வேண்டும் என்றால், அதற்கு மனதின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

மனதின் ஒத்துழைப்பு சரியாக அமைந்து விட்டால் செய்யும் செயலில் வெற்றி என்பதும் நிச்சயம்.

ஒரு செயலை செய்யும்போது ஆரம்பத்தில் அதிக ஆர்வமும் செயல் வேகமும் இருக்கும், ஆனால் நாட்கள் செல்ல செல்ல மனக்குதிரையின் வேகம் மெல்ல தனது வேகத்தை குறைத்துக் கொள்ளும்போது அந்த செயலின் மீது ஆர்வம் மெல்ல குறையும்.

இது தற்போது பெரும்பாலானதோல்விகளுக்கு காரணமாக அமைந்து விடுகிறது. தோல்வி அடைந்தவர் களிடம் தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் செய்யும் செயலின் மீது மனதளவில் ஆர்வம் குறைந்ததே காரணமாக இருக்கும்.

இதற்கு உதாரணமாக பல்வேறு நிகழ்வை சொல்லலாம், சபரிமலை யாத்திரை இதற்கு மிகப் பெரிய உதாரணமாக கூறலாம், மாலைஅணி பவர்கள் 48 நாட்கள் கொண்ட ஒரு மண்டலம் விரதம் இருப்பது கட்டாயம், இந்த காலகட்டத்தில் பல்வேறு கட்டுப்பாடுகளை அனுசரிப்பார்கள்.

போக வஸ்து, ஜீவவஸ்து, கேளிக்கை, சுக போகம் போன்றவற்றை தொடர்ந்து அனுபவிப்ப வர்கள் கூட, ஐயப்பன் மாலை அணிந்துவிட்டால் மேற்கண்ட போகங்களை கட்டுப்படுத்தி, தான் அணிந்திருக்கும் மாலைக்கு கட்டுப்பட்டு, 48 நாட்கள் விரதத்தை அனுசரிப்பார்கள்.

ஒரு துளசி அல்லது சந்தக்கட்டையால் செய் யப்பட்ட ஒரு மாலை, தன் கழுத்தில் இருந்து கொண்டு, சுகபோகத்தை அனுபவிக்க தூண்டிய தன் மனதை அடக்கி ஆள உதவுகிறது.

இந்த விரதத்தின் நோக்கமே, மக்கள் தங்கள் மனதை அடக்கி ஆள முடியும் என்பதை மனிதர் கள் உணர வேண்டும் என்ற மிகப்பெரிய உண் மையை உணர்த்த உருவாக்கப்பட்டதாக நாம் பார்க்க வேண்டும்.

48 நாட்கள் விரதம்

**மனதை திறப்போம் மாயையை அழிப்போம்**



ஆன்மிகமலர்



முடிந்து ஐயப்பனை தரிசித்துவிட்டு, மாலையை கழட்டிய பின்பு பழையபடி தன் மனதின் சுகபோக வாழ்க்கையின் கட்டுப் பாட்டுக்குள் மனிதர்கள் இழுத்துச் செல்லப் படுகின்றனர்.

48 நாட்கள் தங்கள் மனதை ஒரு மாலை கட்டுப்படுத்தியது என்பதை சிந்தித்துப் பார்த்தால் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் இந்த சிந்தனையை உருவாக்க மனம் இடம் தராது...

ஒரு மனிதனால் தனது மனதை கட்டுப்படுத்த முடியும் என்பது 100 சதவீதம் உண்மை.

அபரிமிதமான உடல் தகுதி இருக்கும் மனிதன்கூட, போதிய பயிற்சி இல்லாத துறையில் தோற்பான். உடல் தகுதி சற்று குறைவானவர்கள் கூட போதிய பயிற்சி இருந்தால், தேர்ந்தெடுக்கும் துறையில் வெற்றி பெறுவான் என்பதும் உண்மை.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், மருத்துவத் துறையில் எவ்வளவு பொதுவான ஞானம் இருந்தாலும், அதற்கான தேர்வு எழுதி, பயிற்சி எடுத்தால்தான் முழுமை யான மருத்துவ அங்கீகாரம் கிடைக்கும்.

ஒருசிலருக்கு இயற்கையாக மனதை கட்டுப் படுத்தும் ஆற்றல் இருக்கும், இதுபோன்றவர்கள் இன்னும் சில பயிற்சி எடுக்கும்போது ஆன்மீகத் தில் ஜொலிக்கலாம்.

மனதை கட்டுப்படுத்த முடியாமல் தினறுபவர்கள், தியானம், யோகா போன்ற பயிற்சியை எடுத்துக் கொள்ளும்போது மனதை எளிதாக அடக்க முயற் சிக்க முடியும். மனதை அடக்க இந்த பயிற்சிகள் உதவினாலும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் மனதை அடக்கக் கற்றுக் கொண்டால் அல்லது மனதை ஏமாற்றும் வித்தை தெரிந்து கொண்டால்எளிதாக மனதை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம்.

இந்த வித்தை சற்று கடினம் என்றாலும் முயற் சிப்பதில் தவறில்லை, உதாரணத்திற்கு நாமே நம் மனதிற்கு ஒரு கட்டளை இடவேண்டும். குறிப்பாக "நான் இந்த இடத்தில் விற்கப்படும் உணவை இன்று சுவைக்க வேண்டும்" என்று மனதிற்குள் நினைத்துக் கொள்ளவேண்டும். அதை நிறைவேற்றும் விதமாக அந்த இடத் திற்கு, அந்த கடைவரை செல்ல வேண்டும். ஆனால் அந்த உணவை உண்ணாமல் திரும்பி விட வேண்டும்.

இது ஒருவகையில் மனதை ஏமாற்றும் முதல் பயிற்சி வகையாகும். இதுபோன்று அடுத்து... அடுத்து ஒவ்வொரு விஷயமாக தொடர்ந்து செய்துவரும்போது ஒரு கட்டத்தில் மனம் நமது வசம் வந்துவிடும்.

மனம் எனும் குதிரையை சரியான முறையில் செலுத்தினால்தான் வாழ்வில் மேன்மை ஏற்படும், என்னதான் கிருஷ்ணரே தேரை ஓட்டி வந்தாலும், அர்ஜுனனுக்கு பல்வேறு சந்தேகங்கள் தோன்றி மனதில் தடுமாற்றம் ஏற்பட்டதைப் போன்று, என்னதான் வாழ்வில் அனைத்துவித சௌகரியங்கள் இருந்தாலும், மனதை அடக்கும் வித்தை தெரியவில்லையென்றால் வீணான குழப்பங்கள் நமக்குள் தோன்றும்.

மனதை ஏமாற்றும் ஒரு சிறு கதையையும் பார்ப்போம்...

ஒரு அரசன் தனது அண்டை நாடுகளை பிடிக்கும் நோக்கத்தில் கைதேர்ந்த, போர்ப் பயிற்சியில் அதித சக்தி படைத்த வீரர்களைக் கொண்ட படையுடன் தனது அண்டை நாடுகளை போரில் தொடர்ந்து வெற்றிபெற்று, தனது சாம்ராஜ்யத்தை நிறுவிக் கொண்டு வந்தான்.

ஒரு கட்டத்தில் போர் தொடர்ந்து நடைபெற்றதால், நாட்கள் வாரங்களாக மாறியது, வாரங்கள் மாதங்களாக மாறி பல மாதப் போர், அதிகப்படியான நாடுகளை கைப்பற்றி மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொடுத்தது.

கடைசியாக இன்னும் இரண்டு நாட்கள் போர் புரிந்து ஒரு நாட்டைப் பிடித்துவிட்டால், அந்த மன்னனின் சாம்ராஜ்யம் மிகப் பெரியதாக விரிவடையும்.

எதிரி நாட்டுப் படை சற்று பலம் வாய்ந்ததாக இருந்ததால், தன் படை வீரர்கள் பலரை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. போரில் வெற்றி கிடைக்குமா என்ற கேள்விக் குறி வீரர்களின் மனதில் மெல்ல எழ ஆரம்பித்தது.

படை வீரர்களின் மன நிலையை அறிந்த மன்னன், படைத் தளபதியை அழைத்தான்...

அனைத்து வீரர்களின் மத்தியிலும் "இந்தப் போரில் நாம் வெற்றி பெற்றால், நமது சாம்ராஜ்யம் மிகப்பெரிய அளவில் விரிவடையும், போரில் நாம் வெற்றி பெறுவோமா? என்று நமது குல தெய்வமான மாகாளியிடம் உத்தரவு கேட்போம், ஜெயிப்போம் என்றால் போரை தொடருவோம், தோல்வி கிடைக்கும் என்று காளிதேவி உத்தர விட்டால் போரை கைவிடுவோம்" என்று அறிவித்தான்.

மன்னனின் அறிவிப்புக்கேற்ப காளிதேவிபூஜை துவங்கியது, ஒரு நாணயத்தை காளி தேவி முன் வைத்து பூஜை செய்த மன்னன் "இந்த நாணயத்தை காளிதேவி முன்பு சுண்டி விடுவோம், இதில் தலைப்பகுதி வந்தால்நிச்சம் காளிதேவியின் உதவியுடன் நமக்கு வெற்றி கிடைக்கும்" என கூறி நாணயத்தை சுண்டிவிட்டான்.

நாணயம் தரையில் விழும்போது தலைப்பகுதி தென்பட்டது, இதைப் பார்த்த வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர், புத்துணர்ச்சி பெற்றனர். காளிதேவியின் ஆசியால் போரை துவக்குவோம் என்று கூறி, மிகுந்த ஆவேசமுடன் போரிட்டனர், போர் ஆரம்பித்து இரண்டு மணிநேரம் கூட ஆகவில்லை மிகப் பெரிய வெற்றி....

படைத் தளபதி மகிழ்ச்சியுடன் மன்னனிடன் வெற்றிச் செய்தியை அறிவிக்க வந்தான்.

மன்னா, தோல்விதான் கிடைக்கும் என்ற நிலையில் காளிதோவியின் ஆசியால் வீரர்கள் வெற்றி பெற்றனர் என்று கூறினார்.

அதற்கு மன்னன் சிரித்துக் கொண்டே தளபதியாரே... காளிதேவியின் ஆசி என் மூளைக்கு கிடைத்ததால்தான் வீரர்கள் வெற்றி பெற்றனர் என்றான்.

புரியாத தளபதிக்கு விளக்கினான்...

நேற்று நீங்கள் படையின் நிலையை கூறியதும் "காளிதேவியின் முன் அமர்ந்து இதற்கான வழி என்ன என்று தியானித்தேன், அப்போது வீரர்களின் மனச் சோர்வை போக்க புதிய வழி ஒன்றை கண்டுபிடித்தேன், அதன்படி நாணயத்தின் இரண்டு பக்கங்களிலும் தலை வரும்படி உருவாக்க நமது கொல்லரிடம் கூறி ஒரே நாணயத்தில் இரண்டு பக்கமும் தலை வரும்படி வடிவமைத்தேன், அதை காளி தேவி முன் பூஜை செய்து வீரர்கள் முன் காளிதேவியிடம் உத்தரவு பெற்றேன், தலைபகுதி வந்ததால் வெற்றி என்ற ஊக்கத்தை ஒவ்வொரு வீரரின் மனதிற்குள் புகுத்தி, தலை வரும்படி பார்த்துக் கொண்டேன்.

சோர்ந்த ஒவ்வொரு வீரரின் மனோ நிலையையும் இந்த நாணயத்தை வைத்து ஏமாற்றி சோர்வை போக்கி, ஊக்கத்தை விதைத்ததால் தான் இந்த வெற்றி கிடைத்தது" என்றான் மன்னன்.

கடவுள் நம்பிக்கை இருந்தாலும், இதுபோன்ற ஒருசில ஏமாற்றுவேலைகளை மனதிற்கு அடிக்கடி செய்துவந்தால்தான் நமது மனம் கட்டுப்பாட்டில் இருக்கும் என்பதற்கு இக்கதை ஒரு உதாரணம்.

ஆசையை உருவாக்குங்கள், அந்த ஆசையை நிறைவேற்றாமல் கைவிடுங்கள், இந்த ஏமாற்று வித்தையும் மனதை கட்டுப்படுத்தும்.

ஒரு இனிப்பு பண்டத்திற்கு ஆசைபடுங்கள், இனிப்பு பண்டத்தை காசு கொடுத்து வாங்கி அதை சாப்பிடாமல் வேறு ஒருவருக்கு கொடுத்து விடுங்கள், இந்த இடத்தில் உங்கள் மனம் ஏமாற்றமடையும்.

இதுபோன்று உங்களுக்கு மிகுந்த ஆர்வமுள்ள பொருட்கள், செயல்கள் போன்றவற்றை பயன்படுத்தி மனதை ஏமாற்றி, தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதன் மூலம், தேரோட்டியான கண்ணன் எப்படி அர்ஜூனனுக்கு மனத் தெளிவும், வெற்றியையும் தேடித் தந்தானோ அதுபோல நீங்களும் மனத் தெளிவு அடைந்து வெற்றிபாதையில் பயணிக்கலாம்.

– பாதையை தேடி...

போன்: 9444228203

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










**விருப்ப சந்தா**

## UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**